Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 27 செவ்வாய்க்கிழமை (13.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 349



இரகசியச் செய்தி என்ன? (08)

குழந்தையைத் தத்தெடுத்த பசு



(11)

பாவனைக்கு விடாமல்... (05)






விருமாண்டியிஸம் (14)

## இளவாலையில் ஆணின் சடலம் மீட்பு


இளவாலை பிரதேசத்தின் உயரப்புலம பகுதியில் உள்ள கைவிடப்பட்ட கிணறொன்றிலிருந்து ஆணொருவரின் சடலத்தை நேற்றுக் காலை படையினர் மீட்டுச் சென்றுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மக்கள் தெரிவிக்கையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் குறித்த பிரதேசத்தை சுற்றிவளைத்த படையினர் மக்கள் எவரையும் கண்டபடி வீதிகளிற்க்கு வரவோ, வீதிகளில் நிற்கவோ அனுமதிககவில்லை. பின்னர் அப்பகுதியில் உள்ள பற்றைகள், புதர்கள், கைவிடப்பட்ட காணிகள் அனைத்தையும் சோதனையிட்ட படையினர் அப்பகுதியிலுள்ள கைவிடப்பட்ட கிணறொன்றிலிருந்து ஆணொருவரின் சடலத்தை எடுத்துச் சென்றதை மக்கள் கண்டுள்ளனர்.

எனினும் அவ்விடத்திற்கு பொலிஸாரோ, நீதிபதிகளோ எவரும் சமூகம் கொடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் றொபேட் ஓ பிளேக்

### யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் இன்று முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவிருக்கிறார்.



யாழ். நகரில் நாலாம் குறுக்குத்தெருவில் உள்ள அமெரிக்கன் கோணரில் மதியம் 1.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. யுத்தத்திற்குப் பிந்திய நிலையில் யாழ்ப்பாணத்தின் சமூக, பொருளாதார நிலைமைகள் எப்படி உள்ளது என்பது குறித்துச் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளது.

இப் பேச்சுக்களின்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவாவில் கருத்து யுத்தம்



ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கும், ஐ.நா. மனித உரிமைகள ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இக் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நடிவடிக்கைகளை கடுமையாக விமர்சனம் செய்தார். அதேவேளை, தீவிரவாதத்துக்கு எதிரான போரின் பின்புலத்தில் மனித உரிமைகளைப் பேணத் தவறிய நாடுகளுக்கு இலங்கை ஒரு உதாரணம் என்று நவநீதம்பிள்ளை தனது உரையில குற்றம்சாட்டினார். பாதுகாப்பு விடயங்களை இலங்கை அரசு முழுமையாக மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முப்பதாண்டுகளில் இலங்கை தனியே தீவிரவாதத்தினால் மட்




டும் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவசரகாலச்சட்டத்தை நீக்கினால் மட்டும் போதாது என்றும், பாதுகாப்புத் தொடர்பான அனைத்துச்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த நிலை தொடராது

தங்கத்தின் விலையில் தற்போது ஏற்பட்டுள்ள அபார விலையுயர்வு தொடர்ந்து இருக்காது என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தற்போதைய நிலைபோன்று கடந்த 1980 ஆம் ஆண்டுகளிலும் தங்கத்தின் விலை யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடன் அரசு மீண்டும் அரசியல் பேச்சு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அரசியல் பேச்சுக்கள் மீண்டும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

நேற்றுக்காலை அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர றொபேட் ஓ பிளேக்குடனான சந்திப்பைத் தொடர்ந்து கருத்து வெளியிடும்போதே அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேற்படி தகவலை வெளியிட்டார். இதன்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் றொபேட் ஓ பிளேக ஜனாதிபதியிடம் கேட்டறிந்ததாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நவம்பர் மாத நடுப்பகுதியில நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியாகும் என உறுதியளித்த ஜனாதிபதி, குறித்த அறிக்கைக்கிணங்க அடுத்த

(15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை

### இந்தியாவிடம் கருத்தறிகிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கை அரசு மீதான மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்குச் சர்வதேசப் பொறிமுறை அவசியமா இல்லையா என்பது குறித்து முதரப்புப் பேச்சுக்களில் அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றெபோட் ஓ பிளேக் ஈடுபட்டிருப்பதாக மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது இருநாள் விஜயமாக இலங்கை வந்திருக்கும் றொபேட பிளேக் அரச தரப்பு மற்றும் தமிழ்த் தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து, மேற்படி விஜயம் தொடர்பாக அவர்களின் உணர்வலைகளைக் கேட்டறிந்து வருகிறார்.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லிக்கு பயணமாகும் அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் அங்கு இந்திய உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஜெனிவாவில நேற்று ஆரம்பமாகியுள்ளது. போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன எடுத்திருக்கும் நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் பெரும் நெருக்கடியையும், சங்கடமான சூழ்நிலையையும் இலங்கை எதிர்கொண்டிருக்கின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)


## நீரில் மூழ்கி இளைஞர் மரணம் சந்நிதி தீர்த்தக் கரையில் விபரீதம்



செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தீர்த்தத்திருவிழாவான நேற்று சந்நிதிக் கடலில் நண்பர்களுடன் நீராடிய இளைஞன் நீராடும் எல்லைக்கு அப்பால் சென்றபோது சுழியில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆச்சிரமம் லேன், இணுவில் கிழக்கைச் சேர்ந்த இராசமனோகரன் மகிதன் (வயது - 23) என்பவரே நீரில் மூழ்கி பலியானவராவார். குறித்த நபரின் சடலத்தைக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## றொபேட் ஓ பிளேக்குடன் கூட்டமைப்பு முக்கிய பேச்சு



தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக இது வரை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பான விபரங்களையும் இவ்விடயத்தில் அரசுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கத துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேககிடம் விரிவாக எடுத்து விளக்கியுள்ளனர்.

அதேவேளை வடகிழக்கில் காணி சுவீகரிப்பு மற்றும் பொது மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சீரற்ற பேருந்து சேவைகள் துன்பத்தின் விளிம்பில் பயணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பயணங்களில் ஈடுபடும் இ.போ.சவுக்குச் சொந்த மான பஸ் வண்டிகள் குறிப்பிட்ட சில இடங்களில் உரிய நேரத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதில்லை எனப் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக தெல்லிப்பளை, அளவெட்டி மற்றும் சுன்னாகம் பகுதியினூடாக சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகளே சரியான நேரங்களுக்குப் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதில்லை.

இது தவிர தற்போது மழை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுவதாகக் குறை கூறுகின்றனர். இதனால், தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மருதனார்மடம் இராம நாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மாதாந்த பருவ காலச் சீட்டைப் பயன்படுத் தியே பயணம் மேற்கொள்கின்றனர். இவர்களும் இப்பேருந்து சீரற்றுக் காணப்படுவதால் வெகுவாகப் பாதிப்புறுகின்றனர்.

768, 769, 770 ஆம் இலக்க பாதைகள் ஊடான பஸ்களின் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதுடன், இவ்விடயம் குறித்து உயரதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(எப்.எஸ்)

# கசிப்பு விற்பனை அபராதம் 20 ஆயிரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு ஏற்கனவே தண்டனை பெற்றதுடன் மீண்டும் அதே குற்றச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தால் 20 ஆயிரம் ரூபா அபராதமும், 3 மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த குற்றவாளிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதமும், 3 மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

அத்துடன், ஏற்கனவே குற்றச் செயல் புரிந்ததால் அதற்கு 3 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

(உ.கே)

# யாழில் பரவலாக மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்றுக் காலை முதல் மாலை வரை பரவலாக மழை பெய்துள்ளது. குறிப்பாக யாழ்.நகர்ப் பகுதி, வண்ணார்பண்ணை, நாவாந்துறை, கொக்குவில், இணுவில், மருதனார்மடம் உள்ளிட்ட பிரதேசங்களில் மழை பெய்தது.

இதனால், அப்பிரதேசங்களில் மழை வெள்ளம் தேங்கிக் காணப்பட்டதுடன், வீதிகளில் நீர் தேங்கிக் காணப்பட்டமையினால் போக்குவரத்து செய்வதில் பிரயாணிகள் அசௌகரியங்களுக்கு உட்பட்டதையும் காணமுடிந்தது.

(எப்.எஸ்)



நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சகோபுர உற்சவத்தின் போது, சுவாமி முன்றலில் இசை அர்ப்பணமாக ஸ்ரீமதி ஆர். வாசஸ்பதி அவர்களின் சாஸ்திரீய சங்கீத இசை நிகழ்ச்சியினைக் காணலாம்.

# தீ விபத்தில் குழந்தை பலி

(கொழும்பு)

நிட்டம்புவ திகாரியபட்ட ஹென்வத்த பிரதேசத்தில் நேற்றுக் காலை வீடொன்றில் தீப்பற்றிக் கொண்டதில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கு ஒழிப்பு; தொடர்ந்தும் தீவிரம்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களுடனான டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. டெங்கு நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் பல்வேறு தளங்களில் ஆராயப்பட்ட போது தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புகையூட்டல் தற்காலிகமான பாதுகாப்பை வழங்குமேயன்றி அது ஒரு நிரந்தரத் தீர்வாகவமையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் பாதுகாப்பான கழிவகற்றல் தொடர்பில் தனித்துவமான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாலும், உள்ளூராட்சி மன்ற ஆளுகை எல்லைப்பரப்பினுள் பல்வேறு சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும், ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அந்தந்த சபையின் தவிசாளருக்கு பல்வேறு சுகாதார விடயங்கள் தொடர்பில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையாலும், பிரதேச சபைகள் உரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர், உறுப்பினர்களுடைய ஆதரவுடனும் மக்கள் பங்களிப்புடனான, தம்மால் செயற்படுத்தக்கூடிய பாதுகாப்பான கழிவகற்றல் வேலைத்திட்டமொன்றை வடிவமைத்துச் செயற்படுமாறும் இதற்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் உள்ளூராட்சி உதவியாணையாளர் பணிமனையுடன் அணுகிப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் சுகாதாரத் திணைக்களத்துடனிணைந்து பாதுகாப்பான கழிவகற்றல் திட்டமொன்றை செயற்படுத்தும் போது மக்கள் தமது பூரண ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கினால் மாத்திரமே திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூநகரி பிரதேசசபை நாளை கன்னி அமர்வு

(முழங்காவில்)

பூநகரி பிரதேசசபையின் முதலாவது அமர்வு நாளை 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நடைபெற்று முடிந்த பிரதேச சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஆறு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் நான்கு உறுப்பினர்களும் வெற்றி பெற்றார்கள். இந்த உறுப்பினர்களும் நாளை நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பங்கு கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(112)

# பாதுகாப்பற்ற கழிவு வாய்க்கால் தடுமாறி விழுந்த வயோதிபர் காயம்

கொட்டடிப் பகுதியில் திறந்த நிலையில் இருந்த கழிவு வாய்க்காலினுள் வயோதிபர் விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் முருகன் (வயது-50) என்ற வயோதிபரே முள்ளந்தண்டு முறிவடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எஸ்)


## பனை அபிவிருத்தி சபை

PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

## விலைமனுக் கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் கீழ்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 22.09.2011 இற்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- முல்லைத்தீவு, முள்ளியவளையில் உற்பத்தி நிலையத்துடன் கூடிய காரியாலயம் மற்றும் வேலி அமைத்தல்
- வவுனியா மாவட்டம் புளியங்குளத்தில் உற்பத்தி நிலையம் அமைத்தல்.
- ஊற்றுப்புலம், அறிவியல்நகர், மன்னார் - நறுவிலிக்குளம் ஆகியவற்றின் காணிகளுக்கு வேலி அமைத்தல்.

**பசுபதி சீவரத்தினம்,**
**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

(C/571)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## வேலைக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) C9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 14-09-2011 - 23-09-2011 பி.ப. 2.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 24-09-2011 நண்பகல் 12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 24-09-2011 பி.ப. 2.00 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
05. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம் மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக, கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல: | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப்பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|
| 1 | மாதகல் காடாப்புலம் பகுதியில் கொல்களம் அமைத்தல் | 11500.00 | 1000.00 | 153.60 |

**திரு.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(C/942)

பாலின் வெண்ணை இருக்கிறது என்று கத்தினால் வெண்ணை கிடைக்காது. அதைத் தயிராக்கி கடையவேண்டும். இறைவா இறைவா என்று சொல்வதால் பலனில்லை அவனைக் காணவிரும்பினால் அதற்கேற்ற முயற்சிகளைச் செய்யவேண்டும். --ராமகிருஷ்ணனர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அறிவு கிடைத்ததின் பேரால்...

ஒருவர் தன்னைப் புத்திசாலி என்று கருதிக்கொள்ள அவருக்குப் பூரண உரிமையுண்டு. ஆனால் மற்றவர்களும் அவரை அப்படிக் கருதவேண்டுமானால், அதைத் தன் பேச்சு – செயல்களின் மூலம் அவர் நிரூபிக்க வேண்டும். புத்திசாலிச் சமூகம் எனப்படுவதும் அப்படி ஒரு புறவயமான கணிப்பில் உருவாகி வரவேண்டியதே.

உலகில் யூத சமூகத்தைக் குறித்து அப்படியான ஒரு கருத்து நிலவுவது உண்மை. தமிழ் சமூகத்தைக் குறித்து அப்படி யாராவது வெளியாட்கள் குறிப்பிட்டிருக்கிறார்களா தெரியவில்லை. ஆனால் நம்மில் பலருக்குள் அப்படி ஒரு நினைப்பு உறைவது உண்மை.

ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினர் அறிவாற்றலில் சற்று மேம்பட்டவர்களாக இருக்கவேண்டுமானால் அதற்கு மரபு ரீதியான காரணங்கள் ஏதாவது இருக்க வேண்டும். பரிணாமத்தில் மனித இனத்துக்குச் சிறப்புப் பண்பாக அமைந்த மூளை வளர்ச்சியையும், அறிவாற்றலையும் குறிக்கும் இந்த மரபணுக்கள் மனித இனம் முழுமைக்கும் பொதுவாகத்தானே இருக்கவேண்டும்? ஆனால் நடைமுறையில் அப்படி இல்லையே என்ற கேள்வி எழுவது இயல்பானது.

இந்தக் கேள்வியின் விளைவாகத்தான், ஒருவித்து இரட்டைகளையும், இருவித்து இரட்டைகளையும் அவர்களின் அறிவுத்திறன் அளவீடு, வளர்கின்ற குடும்ப மற்றும் சமூகச் சூழல், சத்தான உணவுப் பழக்கம், பெற்றோரின் அறிவாற்றல், கல்வி வாய்ப்புக்கள் போன்றவற்றை வைத்து சமூகவியலாளர்கள் பல்வேறு ஆய்வுகளைச் செய்து அறிவாற்றலில் சூழ்நிலையின் பங்கினையும் முக்கியத்துவத்தையும் தெளிவாக்கி வருகிறார்கள்.

ஆனால் இதயநோய், சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய், நீரிழிவு போன்ற நோய்கள் மரபணுக்களினூடாகக் கடத்தப்படுகிறது என்னும்போது அறிவாற்றலும் அவ்வாறு மரபணுக்களின் மூலம் பரம்பரைக்கு கடத்தப்பட வழியிருக்கிறதா என்ற ஆய்வை நோக்கியும் விஞ்ஞானிகள் சென்றிருக்கிறார்கள். அதாவது சில நோய்களின் மரபணுக்கள் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுவதால் பிறப்பிலேயே சில நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் நிரூபிக்கப்பட்டதால், அதே போக்கு அறிவாற்றலின் மரபியலுக்கும் உண்டா என ஆராய்ந்தார்கள்.

ஆரோக்கியமானவர்களிடமும் மூளை குன்றல் நோயுள்ளவர்களிடமும் இருக்கிற மரபணு மாற்றங்களைக் கண்டுபிடித்து, அதன்மூலமாக மூளைச் செயற்பாட்டுக்கும், அறிவாற்றலுக்கும உள்ள மரபுக் காரணிகளை விளக்கும் ஆராய்ச்சிகள் ஏராளமாக நடந்தன.

கடந்த மாதம் வெளியிடப்பட்ட முக்கியமான ஆராய்ச்சிக் கட்டுரையொன்று மரபணுக்களுக்கும் அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பை பல சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறது. ஆரோக்கியமான 3511 ஆண், பெண் இருபாலரினதும் மரபணுவில் மொத்தம் 5,49,692 மரபணு அடையாளங்களைப் பரிசோதித்ததன் மூலம் அறிவாற்றலில் காணப்படும் வேறுபாடுகளில் 51 வீதமும் அவர்களின் மரபணு வித்தியாசங்களினாலேயே தீர்மானமாகின்றன என்று நிரூபிக்கின்றது அந்த ஆய்வு.

எந்த குறிப்பிட்ட மரபணு அறிவாற்றலில் பங்கு வகிக்கிறது என்பது இன்னும் தெரியாவிட்டாலும், மரபணுக்களின் பங்கையும் அறிவாற்றலின் மரபியலையும் நேரடியாகத் தெரிவிப்பதால் இது முக்கியமானது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மரபுரீதியான அறிவாற்றல் என்பது சமூகவியல் நோக்கில் மிக அபாயகரமான கொள்கையாக அமையலாம் என்பதையும் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஏனெனில், பன்னெடுங்காலமாக உலகின் பல பகுதிகளின் மரபான பண்பாக அறிவாற்றல் (இன்னும் பல பண்புகள்) கருதப்பட்டு, அது ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ அல்லது வம்சாவழியினருக்கோ சொந்தமானதென்றும் அதனால் அவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டும் பிறர் தாழ்வாக நடத்தப்பட்டும் உருவான ஏற்றத்தாழ்வுகளே மனிதனை இப்போதும் சிதைத்துக் கொண்டிருக்கிறது.

பணத்தால், நிறத்தால், மதத்தால், மொழியால், சாதியால் எல்லாம் ஒடுக்கப்படும் மனிதன், இனி அறிவாற்றலை முதுசமாகப் பெறுகிறவர்களாலும் ஒடுக்கப்படுவானா?

- ஆசிரியர்

# டெங்கு நோயை ஒழிப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு தேவை

(யாழ்ப்பாணம்)

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பாதுகாப்பான கழிவகற்றல் திட்டமொன்றை செயற்படுத்தும் போது மக்கள் தமது பூரண ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கினால் மாத்திரமே திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் என்று யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ் மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்டத்தின் அனைத்து பிரதேச சபைகளினதும் செயலாளர்களும், செயலாளர்கள் சமூகமளிக்காத பிரதேச சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்களும், அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மேற்பார்வைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் போன்றோர் பங்கு பற்றினர்.

டெங்கு நோய்க்கட்டுப்பாட்டில் மக்களினது பங்களிப்புடனான பாதுகாப்பான கழிவகற்றல் முகாமைத்துவமே நிலைத்திருக்கக் கூடிய பிரயோசனமான விளைவைத் தரும். சில உள்ளூராட்சி சபைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பான கழிவகற்றல் முகாமைத்துவ வேலைத்திட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் இரும்புக் கழிவுகள் சேகரிக்கப்படுவதைப் போல் ஏனைய பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் கண் ணாடி, போத்தல்களும் மீள்சுழற்சிக்காக தென் பகுதியிலுள்ள அவ்வாறான செயற்பாட்டிலீடுபடும் நிறுவனமொன்றுடன் தொடர்பு கொண்டு சேகரிக் கப்படுமானால் பெருமளவான டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இல்லாதொழிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

## பயணிகள் இல்லாத ரயிலால் வருடாந்தம் 20 இலட்சம் நட்டம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மீரிகம நோக்கி இரவு நேர சேவையில் ஈடுபடும் ரயிலால் ரயில்வே திணைக்களத்திற்கு வருடாந்தம் 20 இலட்ச ரூபா நட்டம் ஏற்படுவதாக அகில இலங்கை ரயில்வே ஊழியர்கள் பொதுச் சங்கம் தெரிவிக்கிறது.

குறித்த ரயில் தினமும் 9.35 இற்கு கோட்டை ரயில் நிலையததிலிருந்து புறப்பட்டு இரவு 11 மணிக்கு மீரிகமையை சென்றடைகிறது, எனினும் பயணிகள் எவரும் இல்லாமல் சுமார் 20 கிலோமீற்றர் தூரம் இந்த ரயில் பயணிப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ்.பீ.வித்தானகே தெரிவிக்கிறார்.

இது தொடர்பில் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் ரேஹன திசாநாயக்கவிடம் வினவியபோது குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி திணைக்களத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## அதிபர்களுக்கான வெற்றிடம்

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்தில் இரண்டு பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடம் காணப்படுகிறது.

இதில் தென்னியன்குளம் அ.த.க. குழாமுறிப்பு அ.த.க. ஆகிய பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களிற்கு தகுதியானவர்களிடமிருந்து துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையினரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. (உ, 121)

## செயலமர்வு

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற நுண்கலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாங்குளம் ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் குறிப்பிட்ட ஆசிரியர்களை தறவாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் அறிவித்துள்ளார். (உ-121)

## பூரான் கடிக்கு சிகிச்சை பெறாவிடின் எதிர்காலத்தில் நோய் ஏற்படும்

(கொழும்பு)

பூரான் கடிக்கு இலக்கானவர்கள் உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளத் தவறினால் பிற்காலத்தில் கண்பார்வை குறைதல் பற்சிதைவு, முடி உதிர்தல் போன்ற நோய்களால் பீடிக்கப்படலாம் என, களனி விஷச் சிகிச்சை மருத்துவ நிலையத்தின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வனித்தா கல்யாணி பத்திராஜ் தெரிவித்துள்ளார்.

உறங்கிக் கொண்டிருக்கையில் பூரான் தீண்டினால் உணர்வதில்லை. இதனால் உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடுகின்றனர்.

எவ்வாறாயினும் பூரான் கடிக்கு இலக்கான இடத்தில் அவ்வப்போது வலி கூடிக், குறைவதை உணர முடியும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

# சமூக நல பாதுகாப்பு நிதியத்துக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத் திட்ட நிதிய நடைமுறை விதிக்கான அங்கீகாரத்தை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் வழங்கியுள்ளார்.

சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்கள், கொத்தணிகள், சித்த மருந்து உற்பத்தி வி.கூ.சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள், பணியாயர்கள், சமாசப் பணியாளர்கள் அவர்களுடன் இணைந்த குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் நலன்கள் கருதியும், அவர்களின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டுக்குமாக அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்டதினை 01-01-2011ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளார்.

இத்திட்டத்தில் இணைந்துள்ள கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும் நிதி மாதாந்தம் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு திரண்ட நிதியினை வருடாந்தம் நிலையான வைப்பிலிடுதல் வேண்டும்.

நிலையான வைப்பிலிருந்து பெறப்படும் வட்டியினூடாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இக்கொடுப்பனவுக்ள் நடைமுறை விதிக்கு மாறாக வழங்கப்படுதல் ஆகாது.

ஒவ்வொரு கொடுப்பனவின் போதும் எனது முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இத்திட்டத்தில் ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமாயின் பொதுச் சபையினதும் நெறியாளர் குழுவினதும் தீர்மானத்துடன் எனது முன்னனுமதியுடன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்போது நிலவும் வறட்சியால் தொற்றுநோய் பரவும் அபாயம்

(கிளிநொச்சி)

துணுக்காய் பிரதேச மல்லாவி மருத்துவமனையில் அண்மைக் காலமாக நோயாளர்களின் தொகை சடுதியாக அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நிலவும் வறட்சியுடன் கூடிய காலநிலையினால் வயிற்றோட்டம், சாதாரண காய்ச்சல் ஆகிய நோய்க் காரணிகளை யுடைய நோயாளர்களே அதிகளவில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர். இவ்வைத்தியசாலை வைத்தியர்கள் சிகிச்சை பெற்றுச் செல்லும் நோயாளர்களுக்கு கொதித்தாறிய நீரைப் பருகுமாறு அறிவுறுத்தி வருகின்றனர். (உ, 121)

# சமய வாழ்வு வாழ இளம் வயதிலிருந்தே எமது பிள்ளைகளை வழிப்படுத்தவேண்டும்

- சைவப்புலவர் மு. முரளிதரன்

(யாழ். நிருபர்)

சமய வாழ்வு மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவதற்குப் போட்டிகள் உதவுகின்றன. இலாப நோக்கற்ற வகையில் சமய நிறுவனங்கள் சமய அறிவுப் போட்டிகளை நடத்த வேண்டும் என்று சைவப்புலவர் முரளிதரன் குறிப்பிட்டார்.

வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தினால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் தெற்கு நாச்சிமார் கோயிலில் அருள்நெறி மன்றத் தலைவர் இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் இன்று நூல்களை வாசிக்கும் பழக்கம் அருகிவருகிறது. சமயம் சார்ந்த நூல்களின் பக்கம் இளவயதினர் நாட்டம் கொள்வதே இல்லை.

மனிதன் மனிதனாக வாழ வழிப்படுத்துவது சமயம், எனவே சமய உண்மைகளை ஒருவன் சரியாக அறிந்திருக்க வேண்டும். இதற்குச் சமய அறிவு சார்ந்த போட்டிகள் வகைசெய்கின்றன.

போட்டிகளை நடத்துவது மட்டுமே சமய நிறுவனங்களின் பணி என்று கருதி விடாது சமய அறிவூட்டல் என்ற தளத்தில் இன்னும் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களிடையே சமய வாழ்க்கை மீதான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எப்படியும் வாழலாம். என்ற எண்ணமுடையவர்களாலேயே சமூகம் சீரழிகிறது. எனவே இளம்வயதிலிருந்தே சமயவாழ்வு வாழ எமது பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும் என்றார். (10)

## ஆயிரத்து 200 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாய விரிவாக்க அலுவலகத்தினால் அரச நிதியுதவியுடன் 50 வீத மானிய அடிப்படையில் ஆயிரத்து 200 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சி , கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் விவசாயச் செய்கையினை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 1200 பயனாளிகளுக்கு இவ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-கே)

## வடமராட்சி கிழக்கு வாரிவட்டன் வீதி அவலநிலை எப்போது தீர்க்கப்படும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள 5 கிலோமீற்றர் நீளமான வாரிவட்டன் வீதியினால் மக்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இவ்வீதி திருத்துவதற்கென கேள்விப்பத்திரம் கோரப்பட்டு வீதித் திருத்தத்துக்கான கல், கிறவல் என்பன வீதியின் இருமருங்கிலும் போடப்பட்டுள்ள நிலையில் வீதியைத் திருத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் உடுத்துறை மகா வித்தியாலயம் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் வியாபாரிகள் பொதுமக்கள் வெகுசிரமத்தின் மத்தியிலேயே தங்கள் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் வீதி வேலை ஆரம்பிக்கப்படாவிட்டால் இப்பாதையூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## புனரமைப்பு

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 25 பாடசாலைகள் இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்த கால போர் அனர்த்தங்களினால் அதிகளவில் சேதமடைந்த பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-121)

## யாழின் சில பகுதிகளில் டெங்கு பரவும் அபாயம்

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந் நோய் வேகமாகப் பரவ முற்படுவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சகல பிரதேச சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறவருவோரின் விபரங்களை உடனுக்குடன் அனுப்பிவைக்குமாறு யாழ். சுகாதாரசேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்தியசாலை கலாநிதி ஆ. கேதீஸ்வரன் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். (10)

## கொடிகாமம் காளி அம்பாள் ஆலய மஹா குடமுழுக்கு பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் அருள்மிகு ஸ்ரீ மஹாலாவண்ய காளி அம்பாள் திருக்கோவிலில், 33 குண்டங்களுடன் மஹா குடமுழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்வாலயம் தற்போது தென்னிந்திய திராவிடக் கட்டடக்கலை மரபினில் இந்தியச் சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் 108 சாக்த வடிவங்கள் உயிரோட்டத்துடன் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டு பெருங்கோயிலாகக் கட்டப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை கர்மாரம்பமும் நாளை புதன்கிழமை யாகாரம்பமும் இடம்பெற்று மறுநாள் வியாழக்கிழமை காலை 7மணிமுதல் 5 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பக்கிரியைகள் இடம்பெற்று காலை 9மணிக்கு மஹாகுடமுழுக்கு அபிஷேகம் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன சிவாச்சாரியார் சைவசித்தாந்த பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குருவாக விளங்குவார்.

## நீர்த்தேக்கத்தில் கொட்டப்படும் கழிவுகளால் டெங்குநோய் பரக்கூடிய அபாயம்

(நாவற்குழி)

நாவற்குழியில் உள்ள அரசாங்க களஞ்சியக் கட்டடத்தின் அருகில் காணப்படும் சிறிய நீர்த்தேக்கம் மாசடைந்து காணப்படுவதால் டெங்கு நோய் பரவக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இந்நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் தென்பகுதியில் இருந்து வரும் பயணிகள் பாவித்த கழிவுப் பொருட்கள் நாளாந்தம் கொட்டப்படுகின்றன. இதைவிட அப்பிரதேசத்திலுள்ள பொதுமக்களும் பொலீத்தீன் பைகள், போத்தல்கள் மற்றும் குடிநீர்ப்போத்தல்கள் உள்ளிட்ட இதர கழிவுப்பொருட்களும் இந்நீர் தேக்கத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இதனால் இவை சுகாதாரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இச்செயற்பாட்டினால் ஏ-9 வீதியால் செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே சுகாதாரப் பகுதியினர் இதனைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (19)

## முன்பள்ளி கல்வி உயர் சான்றிதழுக்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முன்பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கில மொழிகளில் இந்நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்குரிய தகைமைகளாக விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதி அன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் முதலாம் மொழி கணிதம் உட்பட குறைந்தது, ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இதில் ஆங்கில மொழியில் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபடவிரும்பும் மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி (2001இற்கு முன்பு) அல்லது திறமைச்சித்தி, 2001இற்குப் பின்பு) பெற்றிருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களில் பொது விடுமுறை மற்றும் ஞாயிறு, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய எல்லா நாட்களிலும் முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் இடையில் ரூபாய் 500 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் ஒரு தெரிவுப் பரீட்சைக்கு தோற்றவேண்டும் இப்பரீட்சையில் சித்தியடைவோர் முன்பள்ளிக் கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தாங்கள் விண்ணப்பப் படிவம் பெற்ற பிராந்திய அல்லது கற்கை நிலைய உத்தியோகத்தருக்கு தங்களது முகவரியிட்ட அஞ்சல் அட்டையுடன் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் 0112881327,0112881256 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.



சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்றுக் காலை நடைபெற்ற போது வாழ்வகத் தலைவர் ஆர். ரவீந்திரன் உரையாற்றுவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வுகளையும் காணலாம். (62)

# பூநகரி கலாசாரப் பேரவையின் முதலாவது கலாசாரப் பெருவிழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது கலாசார விழா கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு பூநகரிப் பிரதேச கலாசார பேரவையால் உதவி அரசாங்க அதிபர் சு.வசந்தகுமார் தலைமையில் முழங்காவில் மகாவித்தியாலய மண்டபத்தில் நடத்தப் பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தின ராகவும், மற்றும் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், மேலதிக அரச அதிபர் சிறிநிவாசன், பூநகரி பிரதேச சபைத் தவிசா ளர் சிறிஸ்கந்தராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளர் ச.லலீசன், கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின்போது முழங்காவில் பிள்ளை யார் கோவில் முன்றி லிலிருந்து விருந்தினர்கள் விழா மண்ட பத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

காலை அமர்வு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அரங்கிலும் மாலை அரங்கு முன்னாள் அரச அதிபர் கந்தையா பொன்னம் பலம் அரங்கிலும் இடம்பெற்றன.

காலை அமர்வில் விழாவைக் கௌர வப்படுத்தும் வகையில் பூந்துணர் என்ற சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட் டது. சஞ்சிகையின் வெளி யீட்டுரையை உதவித் திட்டமிடற் பணிப்பாளர் வி.சொக் கனாதனும், சஞ்சிகையின் விமர்சன உரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீ சன் வழங்கினர். உதவி அரச அதிபர் சு.வசந்த குமார் நூலை வெளியிட்டு வைக்க அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மது விலக்கு அவசியமா? அவசிய மில்லையா என்ற தலைப்பில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. கலாசாரப் பேரவையின் உபதலைவர் பொன். தில்லைநாதன், நிர்வாக உத்தியோகத்தர் கு.சிவலிங்கம், பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் த.தேவிபாலன், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பா.முகுந்தன், கிராம அலுவலர் நா.தமிழினி, முகாமைத்துவ உதவியாளர் திருமதி ச.ரேணுகா ஆகியோர் பட்டிமண்டப நிகழ்வில் பங்கேற்றனர். விரிவுரையாளர் ச.லலீசன் நடுவராகச் செயற்பட்டார். இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங் களைப் பிரதி பலிக்கும் கலை நிகழ்ச்சிகளும் ஆற்றுகை செய்யப்பட்டன. முள்ளியவளைக் கலைஞர்கள் வழங்கிய கோவலன் கூத்து மாலை அரங்கின் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

## பொருட்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

வடமாகாணத்திலுள்ள கேட்டக்கல்வி அலுவலகங்களை வலுப்படுத்தும் வகை யில் 12 கோட்டக் கல்விப் பணிப்பாளர் களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் மடிக் கணினிகள் புகைப்படக் கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் மாந்தை கிழக்கு கோட்டக் கல்விப் பணிப் பாளருக்கு மேற்படி பொருட்கள் வட மாகாண ஆளுநரால் அண்மையில் வழங் கப்பட்டுள்ளது. இதன்மூலம் கோட்டக் கல்விச் செயற்பாடுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ, 121)

## பயிற்சிப்பட்டறை

(கிளிநொச்சி)

தென்னிந்திய திருச்சபையின் ஏற்பாட் டில் கிளிநொச்சி மாவட்ட வாலிபர்களுக் கான உளவியல் சார்ந்த பயிற்சிப் பட்டறை யொன்று எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் ஜெயபுரம் அமெரிக் கன் மிஷன் தேவாலயத்தில் நடைபெற வுள்ளது. இப்பயிற்சிப் பட்டறை எதிர் வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி 18 ஆம் திகதி பிற் பகல் 3 மணி வரை நடைபெறவுள்ள துடன், இதில் 100 இற்கும் மேற்பட்ட வர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

## பாவனைக்குவிடப்படாத நிலையில் சந்தைக்கான 3 மலசலகூடங்கள்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட பொதுச்சந்தையில் அமைக் கப்பட்டுள்ள 3 பொது மலசலகூடங்களும் நீண்டநாட்களாக பூட்டிய நிலையில் உள்ளதால் பலர் அவற்றைப் பயன்படுத்த முடியா துள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபையினால் இச்சந்தைப் பகுதியில் 3 மலசலகூடங்கள் அமைக்கப்பட்ட நிலையில் தற்போது குறிப்பிட்ட நாட்களாக இவை பூட்டப்பட்டுள்ளதால், பொதுச்சந்தை வியாபாரிகள், நுகர்வோர், பஸ் பயனாளிகள் மற்றும் தூர இடங்களுக்குப் பயணத்தை மேற்கொள்வோர் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இவ் மலசலகூடங்களைத் திறப்பதற்கு ஆவண செய்யுமாறு பொதுச்சந்தை வியாபாரிகள் கேட்டுக்கொள்கின்றனர். (உ-18)

## பயிற்சி பெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை இதுவரை காலமும் பெறாதவர்களுக்கான பயிற்சி வழங்குவதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகின் றன.

எனவே, முன்பள்ளி ஆசிரி யர்கள் தமது பெயர்களை யாழ்.வலயக் கல்வி முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆரம்பப் பிரிவு பிரதிக் கல்வி பணிப் பாளர் கே.விமலநாதன் அறிவித் துள்ளார். (எஸ்)

## மாரிகாலத்திற்கு முன் வீடுகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் சோபா நிறுவனத்தி னால் அமைக்கப்பட்டு வரும் தறகாலிக வீடுகளை அமைக்கும் பணிகள் நிறைவு பெறாததால், இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாயவனூர் கிராமத்தில் உளள 458 குடும்பங்களில் 98 குடும் பங்களுக்கு இந்நிறுவனம் தற் காலிக வீடுகளை அமைக்க முன வந்துள்ள நிலை யில் அவ் வீடு களை அமைப்பதற்கான பணி கள் இதுவரை பூர்த்தி செய்யப் படாமையால் இந்த மக்கள் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் மழை காலத் திற்கு முன்னராவது வீடு அமைக் கும் பணிகளைப் பூர்த்தி செய்து தருமாறு அந்த மக்கள் குறித்த நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர். (உ.கே)

## நேர்ப் வீட்டுத்திட்ட கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நேர்ப் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளி நொச்சி மாவட்டச். செயலகத் தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணி யளவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரை யாடலில் 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நேர்ப் திட் டத்தின் கீழான வீடமைப்புப் பணி களின் தற்போதைய நிலை பற்றி யும் இவற்றை விரைந்து செய்து முடிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந் துரையாடப்பட் டது. இக்கலந்து ரையாடலில் பிரதேச செயலக திட்டப் உத்தியோகத்தர்கள், பிர தேச செயலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (உ.கே)

## மயானத்தில் கிணறு இல்லை அசுத்தமாக ஆலயக் கேணி

(யாழ்.நிருபர்)

காரைநகர் ஆலங்கன்றடி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ காலத்தில் காரை நகரில் உள்ள பிரதான மயானமான சாம்பலோடை மயானத்தில் தகனக்கிரியைகளை நடத்தி விட்டு நக்கினதானம் கொடுப்பதற்காக ஞானவைரவர் ஆலய திருக்குளத்தை மக்கள் பயன்படுத்தி வரு கிறார்கள்.

திருவிழாக்காலங்களில் ஆலயத்தில் பக்தர்கள் கூடியிருந்து வழிபாடு செய்யும் போது மரண நிகழ்வுகளில் கலந்துகொண்டு மயானத்தில் தகனக்கிரியைகளைச் செய்தவர்கள் ஆலயக் கேணியைப் பயன்படுத்தி நக்கினதானம் கொடுப்ப தினால் ஆலய வழி பாடுகளால் ஈடுபடும் அடியார் களுகுக்கு அசௌகரியத்தினையும் மனவேதனை யையும் ஏற்படுத்தும் செயலக இது அமைந்துள்ள தென அடியார்கள் கவலை தெரிவிக்கின்றனர். (10)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி மாணவர்களின் போஷாக்கு விருத்திக் காக ஒவ்வொரு செயலகத்தினாலும் பசுப்பால் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப் பசுப்பால் வழங்கும் திட்டத்தினை பெறத் தவறிய முன் பள்ளிகள் தமது பதிவுகளை அந்தந்த பிரதேச செயலகங்கில் மேற்கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(13.09.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 27 ஆம் நாள்.
இராகுகாலம்03.03–4.33, சுபநேரம் 10.33 –12.05,
நட்சத்திரம்: பூரட்டாதி காலை 7.55 வரை
திதி: பிரதமை பி.ப 4.5வரை
மகாயைபட்ச ஆரம்பம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, தேடித்திரிதல், எதிரியை வெல்லுதல், மனமகிழ்ச்சி, உற்சாகம்.

**ரிஷபம:–** உறவினர் வருகை, பணக் கஷ்டம், மனக் குறைபாடு, வீண் அலைச்சல், தேக சுகக் குறைவு.

**மிதுனம் :–** பணவரவு, குடும்பத்தில் நிம்மதி, பெரியோர் பாராட்டு, அதிகாரப் போட்டி, நினைத்ததைச் சாதித்தல்.

**கடகம்:–** பிணக்குத் தீர்தல், பணக் கஷ்டம், சகோதர பாசம், வெளிநாட்டு உதவி, தொழில் மந்தம்.

**சிம்மம்:–** பணவரவு, தொழில் ஆதாயம், சுற்றத்தார் ஆதரவு, நல்ல செய்தி வரும், தேக ஆரோக்கியம்.

**கன்னி :–** நினைத்ததைச் சாதித் தல, பணக் கஷ்டம், தொழில் முடக்கம், பிணக்குத் தீர்தல், சகோதர வெறுப்பு.

**துலாம் :–** பண வரவு, வெளிநாட்டு உதவி, குடும்பத்தில் மகிழ்சி, தொழில் விருத்தி, உற்சாகம்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, வீண் கோபம், உடல்நலக் குறைவு, பந்தபாசம்.

**தனுசு:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், நண்பர் வருகை, கடன் வாங்குதல், உறவினர் தொல்லை.

**மகரம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, கடன் வசூல், உறவினர் வருகை, நண்பர் உதவி.

**கும்பம் :–** பணக் கஷ்டம், உடல்சுகக் குறைவு, மருத்துவச் செலவு, மனச் சஞ்சலம், வீண் கோபம்.

**மீனம்:–** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, தெய்வ வழிபாடு, நண்பர் வருகை, மனமகிழ்ச்சி.







கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற குடிசைக் கைத்தொழில் கண்காட்சி நிகழ்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் கண்காட்சியை பார்வையிடுவதையும் அங்கு காட்சிப்படுத்தப்பட்ட பல்துறைசார் உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் காணலாம். (படம்: பார்த்தீபன்)

# கொக்குவில் இந்துக் கல்லூரி 7 விக்கெட்டுக்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

மாத்தளை இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றிலேயே கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 17 வயது அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மாத்தளை இந்துக் கல்லூரி அணி 34.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நவநீதன் 46, வித்தியாகரன் 16, கவிதரன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆதித்தன் ஆறு, சிலோஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 19.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சத்யன் 39, ஆட்டமிழக்காது ஆதித்தன் 20, லிங்கநாதன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கலிதரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (07)

# தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் வடமாகாணம் குறிப்பிட்டளவு வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்று முடிந்த தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு நிகழ்வுகளில் வீரர்கள் குறிப்பிட்டளவு வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இதன்படி வவுனியா மாவட்ட வீராங்கனை தனபாலசிங்கம் - அனுஷியா பரிதி வட்டம் வீசுவதில் வெள்ளிப் பதக்கம் வெற்றுள்ளார்.

அதே போன்று வலைப்பந்தாட்டத்தில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றது.

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மன்னார் ஆண்கள் அணியினர் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினையும் கபடிப் போட்டியில் வவுனியா ஆண்கள் அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் மல்யுத்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

தேசியமட்ட போட்டியில் வடமாகாண அணி கடந்த வருடத்தை விட இவ் வருடம் சிறப்பாக விளையாடியுள்ளதாக விளையாட்டுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விளையாட்டுப் போட்டி பயிற்சி முகாம் இன்று

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிப் பயிற்சி இன்று காலை 9 மணிக்கு யாழ்.புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கோப்பாய் கோட்ட விசேட தேவையுடைய மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் அறிவித்துள்ளார். (எஸ்)

# அமரர் பிரபாகரன் மென்பந்துச் சுற்று அரையிறுதிக்கு மகேசன் அணியும்

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினால் அமரர் இ.பிரபாகரனின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கரவெட்டி மகேசன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஆரம்பமான காலிறுதிப் போட்டியில் கரவெட்டி மகேஸ்வரன் வி.கழக அணியை எதிர்த்து அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகேசன் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் அவ்வணி 92 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மதன் 22 ஓட்டங்களையும் அர்ஜுனன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

அம்பன் பிங்பொங் அணி சார்பாகப் பந்து வீச்சில் குமார், கபில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பிங்பொங் அணி ஆரம்பம் முதலே நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறி வேகமாகத் தமது விக்கெட்டுக்களை இழக்க ஆரம்பித்தது.

10 ஆவது ஓவரிலேயே 15 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் அவ்வணி இழந்தது. கரவெட்டி மகேசன் அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய நித்தியன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மகேசன் அணி 41 ஓட்டங்களால் இப்போட்டியில் வெற்றி பெற்றது. இவற்றின் மூலம் அரையிறுதிக்குத் தெரிவாகும் 3 ஆவது அணியாக மகேசன் அணி உள்ளது. (62)

# சென்.அன்ரனீஸ் மாணவருக்கு நகரில் கோலாகல வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட உடற்பயிற்சிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடம் பிடித்த ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி மாணவர்களுக்கு நேற்றையதினம் கல்விச் சமூகத்தினரால் வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்த வீரர்கள் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் யாழ்.பிரதம தபாலகம் வரை அழைத்துச் .செல்லப்பட்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (12)

# தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்கும் வடமாகாண வீரர்கள்

(நெல்லியடி)

வவுனியாவில் இடம்பெற்ற மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்று எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்கவுள்ள வடமாகாண வீரர்களின் வலய ரீதியான விபரங்களின் தொடர்ச்சி வருமாறு-

**மன்னார் வலயம்**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

ஜி.றொமேஷ்சந்தியோகு - சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, ஆர்.எச்.றெனோஷன் லம்பேட் - அரிப்பு ஆர்.சி.ரி.எம்.எஸ், எம்.ஏ,ஆர்.செருபபீரிஸ் - சென்.ஆன்ஸ் ம.வி, ஏ.தனுசன் - சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, பி.கமில்ரன் - சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, ஆர்.எஸ்.ருஷ்தி - ரிஷாட் பதியுதீன் ம.வி, எஸ்.செபன் - சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

இ.ஜெனோசன் - தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ், எல்.சுதர்சன் - முருங்கன் ம.வி, என்.எம்.சியாம் - அல்ஸ்ஹாார் ம.வி, எஸ்.செபில்வின் - பற்றிமா ம.வி, எஸ்.றெவில்சன் - சிலாவத்துறை ஜி.ரி.எம்.எஸ், எம்.ஜோயல் ஜோசப் சில்வா - சென்.ஆன்ஸ் ம.ம.வி, சி.நெவல்றாஜ் - நானாட்டான் ம.வி.

**19 வயதுப் பிரிவு**

ஜே.அன்று டிலக்சன் - நானாட்டான் ம.வி, எம்.தனுஷ்ரன் - சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, பி.அன்று கலின்ரன் - உயிர்த்தராசன் குளம் ஆ.ரி.எம்.எஸ், எச்.எம்.ஆஷாத் - அல்மினா ம.வி, எல்.யாதவன் - சித்திவிநாயகர் எச்.சி., கே.சுதர்சன் - சித்திவிநாயகர் எச்.சி, வி.பிரசாந்தன் - முருங்கன் ம.வி.

**21 வயதுப் பிரிவு**

கே.பார்த்தீபன் - உயிலங்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ், ரி.ஜெகதீசன் - முருங்கன் ம.வி, என்.டிபில்நியுவரன் - பரிகாரிகண்டல் ஜி.ரி.எம்.எஸ், எஸ். ஜெயகரன் - நானாட்டான் ம.வி, என்.நிசாந்தன் - பற்றிமா ஆர்.சி.ரி.எம்.எஸ், என்.தினேஷ் - சித்திவிநாயகர் எச்.சி, எம்.ஹகீஸ் - அல்மினா ம.வி.

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

பி.விஜிதினி - தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ், ஜி.பிரவீனா - மடுக்கரை ஜி.ரி.எம்.எஸ், எஸ்.லூஸ்சியாந்தி - சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, எல்.என்.டிலானி டிலுறுக்சி - சிலாவத்துறை ஜி.ரி.எம்.எஸ், ஏ.பௌஸ்தீனா - நானாட்டான் ம.வி.

**17 வயதுப் பிரிவு**

கே.யூலித்ஜமினி - நானாட்டான் ம.வி, டி.டயானா - நானாட்டான் ம.வி, எஸ்.சிவதாரணி - முருங்கன் ம.வி, எஸ்.ஜான்சிஸ்கா - நானாட்டான் ம.வி, எஸ்.மரிஸ்ரெலா - நானாட்டான் ம.வி.

**19 வயதுப் பிரிவு**

ஜி.மேரிறொனித்தா - சென்.சேவியர் பெண்கள் கல்லூரி, ஏ.திரேஸ்சில்டா பெகுறாடோ - சென்.லூசியா ம.வி, எஸ்.தனுபா - அடம்பன் ம.வி, கே.பிரியதர்சினி - சென்.சேவியர் பெண்கள் கல்லூரி, வி.தனுசிகா - அல்மினா ம.வி.

**21 வயதுப் பிரிவு**

என்.யாழினி - சித்திவிநாயகர் எச்.சி, ரி.லினா - முருங்கன் ம.வி, கே.உஷாந்தினி - சித்திவிநாயகர் எச்.சி, எஸ்.றேக்காலா - சென்.சேவியர் பெண்கள் கல்லூரி, எஸ்.ஸ்ரீபனி சர்மிகா - உயிலங்குளம் எம்.எம்.வி.,` என்.சிறிசுபாஜினி - நானாட்டான் ம.வி.

**மடு வலயம்**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

கே.அஜித் - அடம்பன் ம.ம.வி,

**17 வயதுப் பிரிவு**

எஸ்.டிறிலுசன் - சிலாவத்துறை ஜி.ரி.எம்.எஸ், எஸ்.டயஸ் - சென்.ஜோசப் ம.வி,

**19 வயதுப் பிரிவு**

ஜி.கிசோக்குமார் - சென்.ஜோசப் ம.வி, ஜே.றிசிகரன் - பண்டிவிரிச்சான் ஆர்.சி.எம்.வி, கே.ஆசான் - அடம்பன் ஜி.ரி.எம்.எஸ்.

**21 வயதுப் பிரிவு**

ஏ.சாந்தசகாயநாதன் - அடம்பன் ம.வி.

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

ஏ.அனுசா - சின்னவளையன்காடு ம.வி, ஏ.அமலறொக்சி - இலுப்பைக் கடவை ஜி.ரி.எம்.எஸ்.

**21 வயதுப் பிரிவு**

எஸ்.ஜானுகா - இலுப்பைக்கடவை ஜி.ரி.எம்.எஸ்.

**வவுனியா தெற்கு**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

வை.பிருந்தாரன் - தமிழ் ம.ம.வி.

**17 வயதுப் பிரிவு**

வை.நிசாந்தன் - நெலுக்குளம் கே.-எம்.வி, சி.ஜெனோயன் - தமிழ் ம.ம.வி.

**19 வயதுப் பிரிவு**

என்.சாந்தரூபன் - நெலுக்குளம் கே.எம்.வி, எஸ்.டினோஜன் - தமிழ் ம.ம.வி, வி.அரூரன் - தமிழ் ம.ம.வி.

**21 வயதுப் பிரிவு**

பி.அஜந்தன் - பூந்தோட்டம் ம.ம.வி, கே.சர்மிலன் - தமிழ் ம.ம.வி.

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

பி.ஜெயந்தினி - கணேஸ்வரா ம.வி, எச்.டி.சி.கேமபாலா - நெடுங்குளம் ஜி.எஸ்.எம், பி.தர்சிகா - சைவப்பிரகாச எல்.சி.

**17 வயதுப் பிரிவு**

ஆர்.தர்சிகா - தமிழ் ம.வி, வி.ஜெனிதா - சைவப்பிரகாச எல்.சி, எம்.சுபாசினி - மடுக்கந்த - என்.எஸ்.

**19 வயதுப் பிரிவு**

கே.லிகாஜினி - சைவப்பிரகாச எல்.சி, எஸ்.நிரோஜினி - கந்தபுரம் வாணி வித்தி, எம்.கே.கம்ஸிம்நிசா - ஏ.எல்.லிஹுபால் ம.வி, எஸ்.வாசுகி - இறம்பைக்குளம் ஜி.எம்.எம்.வி, வி.தாமரா - இறம்பைக்குளம் ஜி.எம்.வி, ஜே.எம்.றொஜிதா - இறம்பைக்குளம் ஜி.எம்.எம்.வி.

**21 வயதுப் பிரிவு**

எஸ்.நிலானி - சைவப்பிரகாச எல்.சி, எம்.மேரிகனிஸ்ரலா - பெரியகோமராசன் குளம் ம.வி, கே.நிதர்சனா - சைவப்பிரகாச எல்.சி, எம்.வினோஜினி - சி.சி.ரி.எம்.எஸ், எஸ்.நிலக்சனா - தமிழ் எம்.எம்.வி.

**வவுனியா வடக்கு**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

பி.கிருசாந்தன் - கோவில்புளியங்குளம் - ம.வி.

**17 வயதுப் பிரிவு**

பி.புவிதரன் - புதுக்குளம் ம.வி, ரி.சாந்தன் - சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ், ஏ.கோபிகீதன் - புதுக்குளம் ம.வி.

**19 வயதுப் பிரிவு**

எஸ்.குமணன் - புதுக்குளம் ம.வி, ரி.நிரோஷ் - புதுக்குளம் ம.வி, எஸ்.அருண்குமார் - கல்மடு எம்.எம்.வி, பி.ரூபன் - பூம்புகார் கண்ணகை வித்தி.

**21 வயதுப் பிரிவு**

பி.நிசாந்தன் - ஓமந்தை சி.சி, பி.பால்ராஜ் - புதுக்குளம் ம.வி, எஸ்.தர்சன் - புதுக்குளம் ம.வி.

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

ஆர்.கிருஷாந்தி - சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ், என்.றிசாந்தினி - க்னகராயன் குளம் - ம.வி, ரி.நாகமயில் - பூம்புகார் கே.வி.

**17 வயதுப் பிரிவு**

ஜே.வனேஜா - கல்மடு ம.வி, ஆர்.சுஜிதா - செட்டிகுளம் ம.வி.

# ஆசிய சம்பியன் ஹொக்கித் தொடர் பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா



(ஆர்டாஸ்)

ஆசிய சம்பியன்ஸ் ஹொக்கித் தொடரில் இந்திய அணி அபார வெற்றி பெற்று, கோப்பையை வென்றது. நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் பாகிஸ்தானை "பெனால்டி ஷட் அவுட்" முறையில் 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

சீனாவில் முதல் ஆசிய சம்பியன்ஸ் ட்ரிராபி ஹொக்கித் தொடர் நடந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான், கொரியா, சீனா, மலேசியா மற்றும் ஜப்பான் என, ஆறு நாடுகள் பங்கேற்றன. லீக் போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடம்பெற்ற இந்தியா, பாகிஸ்தான் அணிகள் முன்னேறின.

போட்டியின் இரண்டாவது பாதியில் எப்படியும் ஒரு கோல் அடித்து முன்னிலை பெற்றுவிட வேண்டும் என, இரு அணியினரும் வேகமாகச் செயற்பட்டனர். ஆனாலும் எந்த வீரராலும் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் போட்டி சமனானது.

இதையடுத்து கூடுதல் நேரம் (15 நிமிடம்) ஒதுக்கப்பட்டது. இதில் "கோல்டன்" கோல் அடித்து வெற்றி பெற, இந்தியா, பாகிஸ்தான் அணியினர் முயற்சித்தனர். இருப்பினும், அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. கூடுதல் நேரத்தின் முடிவில் இரு அணியும் கோல் அடிக்காததால், போட்டி "பெனால்டி ஷட் அவுட்" முறைக்குச் சென்றது.

இதில் இந்தியா சார்பில் ராஜ்பால்சிங், யுவராஜ் வால்மீகி, சர்வன்ஜித் சிங், தானிஷ் முஸ்தபா ஆகிய நால்வரும், தங்கள் வாய்ப்புகளை கோலாக மாற்றினர். குர்விந்தர் சிங் சாண்டி மட்டும் வாய்ப்பை வீணடித்தார். பாகிஸ்தான் தரப்பில் முதலில் கிடைத்த நான்கு வாய்ப்புகளில் ஹசீம் கான், சவுகத் ரசூல் கோலாக மாற்றத்தவறினர். இதையடுத்து இந்திய அணி 4-2 என்ற கோல்கணக்கில் அபார வெற்றிபெற்று, சம்பியன் கோப்பை வென்றது.

## கூடைப்பந்தாட்டப் போட்டி பதிவை மேற்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கிளப் 306 பி1 இன் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் குடாநாட்டில் கூடைப்பந்தாட்டப் போட்டியொன்றை விரைவில் நடத்தவுள்ளது.

எனவே இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் அணிகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கூடைப்பந்தாட்டத் தலைவர் எஸ்.றமணன் கேட்டுக் கொண்டுள்ளார். (30)

## 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு திருமலையில் கால்பந்தாட்டம்


(திருகோணமலை)

திருகோணமலை மெக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

றிங்கோ கோல்டன் வைற், றிங்கோ கோல்டன் ஜெலோ என இரு அணிகள் பிரிக்கப்பட்டு கால்பந்தாட்டப்போட்டி நடத்தப்பட்டது. இதில் றிங்கோ கோல்டன் வைற் அணியினர் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டனர்.

றிங்கோ கோல்டன் வைற் அணியில் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் விளையாடிய வீரர்கள் பங்கு கொண்டனர். இவர்களது விளையாட்டைப் பார்வையிடுவதற்காக அவர்களின் பேரப்பிள்ளைகள் வந்திருந்தனர்.

## மழையால் தவிர்க்கப்பட்ட தோல்வி



(பல்லேகல)

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் பல்லேகலயில் நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

237 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய இலங்கை அணி நான்காம் நாள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது. இதில் சங்கக்கார 69, மஹேல ஜெயவர்த்தன 51, பரணவிதான 55, சமரவீர 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் மூன்று, ஹசி, வட்சன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹசி தெரிவானார். இலங்கை முதல் இனிங்ஸ் 174, அவுஸ்ரேலிய முதல் இனிங்ஸ் 411/7. இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் நாள் ஆட்டங்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டதே இலங்கை அணியின் தோல்வி தவிர்க்கப்பட்டதாகவும், அவுஸ்ரேலிய அணியின் வெற்றிவாய்ப்பு நழுவிப்போனதாகவும் கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## செரீனாவைத் தோற்கடித்த சமந்தா மகளிர் கிண்ணத்தைக் கைப்பற்றினார்



(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செரீனாவைத் தோற்டித்து சமந்தா ஸ்டோசர் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் 9ஆம் நிலை வீராங்கனையான சமந்தா ஸ்டோசுர் (அவுஸ்ரேலியா) 28ஆம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) மோதினார்கள்.

செரீனாவின் ஆட் டம் சமீபத்தில் மிகவும் சிறப்பாக உள்ளதாலும், அரை இறுதியில் முதல் நிலை வீராங்கனை வோஸ்னியாக்கியைத் தோற்கடித்து இருந்ததாலும் அவர் மீது அதிக எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் சமந்தாவின் அபாரமான தாக்குதல் ஆட்டத்துக்கு செரீனாவால் ஈடுகொடுத்து விளையாட முடியவில்லை.

சமந்தா 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று சம்பியன் பட்டம் பெற்றார். 3 முறை சம்பியனான செரீனாவுக்கு இது அதிர்ச்சித் தோல்வியாகும். சமந்தா ஸ்டோசுர் பெற்ற முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். நீண்ட இடைவெளிக்கு பிறகு கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்ற அவுஸ்ரேலிய வீராங்கனை என்ற பெருமையை சமந்தா பெற்றார். கடைசியாக 1973ஆம் ஆண்டு மார்க்கெட் அமெரிக்க ஓப்பன் பட்டத்தைப் பெற்று இருந்தார். 1980ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை அவுஸ்ரேலிய வீராங்கனை இவானேவாவ் வென்றார். 31 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்ரேலிய வீராங்கனை கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றுள்ளார்.

இதேவேளை, பெண்கள் இரட்டையர் பட்டத்தை அமெரிக்காவின் லெய்சஸ் கியூபர்- லிசா ரேமண்ட் ஜோடி கைப்பற்றியது. இறுதிப்போட்டியில் இந்த ஜோடி 4-6, 7-6 (7-5), 7-6, (7-3) என்ற கணக்கில் வானியாசிங் (அமெரிக்கா)- யரோசுலோந்து (கஜகஸ்தான்) ஜோடியைத் தோற்கடித்தது.

## இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் டி.ஆர்.எஸ். முறை இல்லை

### பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அணி விளையாடவுள்ள டெஸ்ட் தொடர்களில் டி.ஆர்.எஸ். முறை பயன்படுத்தப்படமாட்டதெனவும் எனினும் ஒருநாள் போட்டித் தொடரில் இந்த முறை பயன்படுத்தப்படுமெனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

டெஸ்ட் தொடரில் டி.ஆர்.எஸ்.முறை பயன்படுத்துவது தொடர்பாக ஒளிபரப்பு நிறுவனமான ரென் ஸ்போர்ட்ஸுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒப்பந்தம் செய்யவில்லையென நடவடிக்கை அதிகாரி சுபன்அகமட் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்கு எதிரான டெஸ்ட மற்றும் ஒருநாள் தொடரில் டி.ஆர்.எஸ். முறையை பயன்படுத்தவே திட்டமிட்டிருந்தோம். துரதிஷ்டவசமாக டெஸ்ட் போட்டியில் இந்த முறையைப் பயன்படுத்துவது தொடர்பாக போட்டி ஒளிபரப்பாளர்களுடன் உடன்பாட்டிற்கு வரமுடியாமற் போய்விட்டது. எனினும் ஒருநாள் தொடருக்காக இந்த முறையைப் பயன்படுத்துவது தொடர்பாக நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்துவிடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் பாகிஸ்தான் அணி மூன்று டெஸ்ட் 5 ஒரு நாள் போட்டி, ஒரு ருவெண்ரி 20 ஆகிய போட்டிகளில் இலங்கை அணியுடன் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் மோதவுள்ளது.

அத்துடன் அடுத்த வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இங்கிலாந்து அணியுடன் 3 டெஸ்ட், 4 ஒருநாள் போட்டி, மூன்று ருவென்ரி 20 தொடர்களில் பாகிஸ்தான் விளையாடவுள்ளது.

## அணித்தலைமை வழங்கப்பட்டால் சிறந்த வகையில் வழிநடத்துவேன்

### பங்களாதேஷ் விக்கெட் காப்பாளர் கூறுகிறார்

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு கப்டனாக நியமித்தால் சிறந்த வகையில் அணியை வழிநடத்துவேனெ அவ்வணியின் விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான முகிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை அவ்வணி இழந்த நிலையில் அணித்தலைவராக இருந்த சகீப் அல்ஹசன் மற்றும் உபதலைவர் தமீம் இக்பால் இருவரும் கடந்த திங்கட்கிழமை அப்பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது, எனது முழு இலக்கும் மேற்கிந்தியாவுடன் நடைபெறவுள்ள தொடரில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதாகும். எனவே அணித்தலைவர் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டால் சிறப்பாகச் செயற்படுவேன்.

சிம்பாப்வே அணிக்கெதிரான தொடர்களில் நாம் சிறப்பாகச் செயற்படவில்லை. இதற்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. எனினும் எமது அணி ஒழுக்கத்தில் மிகச் சிறநததாகும். சகீப் எமது அணியில் முக்கிய வீரர். அதுமட்டுமல்ல, அவர் அணியை வழி நடத்துவதில் சிறந்தவரென அவர் தெரிவித்தார்.

# தண்டனை பெறும் பொலிஸாரே வடக்கு கிழக்கு பகுதிகளில் பணி

## கூறுகின்றது லக்பிம பத்திரிகை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பொதுமக்களுடன் பொலிஸார் சுமுகமான உறவுகளை பேண வேண்டியது அவசியமானது என லக்பிம பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அநேக சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தண்டனை அடிப்படையில் இடமாற்றம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

நீண்ட காலமாக போரின் அழுத்தங்களை நேரடியாக அனுபவித்த மக்கள் சமூகமொன்றுடன் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு பிரதேச மக்கள் தொடர்பில் போதியளவு தெளிவுபடுத்த வேண்டும்.

மக்களின் வாழ்வாதாரம், இந்துக் கலாச்சாரம்,தமிழ்மொழி,சமூகப் பிரிவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற சகல விடயங்கள் தொடர்பிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் விளக்கமளிக்க வேண்டும்.

ஒழுக்கக் கேடு காரணமாக அல்லது அரசியல் தலையீடு காரணமாக இவ்வாறு தண்டனை இடமாற்றம் பெற்று வடக்கு கிழக்கில் கடமையாற்ற அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தண்டனை இடமாற்றம் பெற்றுச் சென்று கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடம் காத்திரமான சேவையை எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்விக் குறியாகும் எனவும் அப்பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முறையான பயிற்சி பெற்ற, அனுபவமிக்க உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்துவதே பொருத்தமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றுவோரும் இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கும் ஏனைய பிரதேச மக்களுக்கும் இடையில் நிலவி வரும் இடைவெளியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அப் பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ஜனாதிபதி அனுப்பிய இரகசிய செய்தி

## சிறப்புத் தூதுவர் மூலம் கையளித்தார்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரகசிய செய்தி ஒன்றை சிறப்புத் தூதுவர் மூலம் கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராக புதுடில்லி சென்ற பதில் வெளிவிவகார அமைச்சர் டியூ.குணசேகர கடந்த வெள்ளிக்கிழமை இந்த இரகசியச் செய்தியை இந்தியப் பிரதமரிடம் நேரில் கையளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் டியூ.குணசேகர வடக்கு,கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமருக்கு விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட ஜனாதிபதியின் இரகசியச் செய்தி என்ன என்பது பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. ஆயினும், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு மகிந்த ராஜபக்ஷவினால் அதிகாரபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகள் குறித்த இந்தியா தனது நிலைப்பாடு, ஐ.நாவில் அதுபற்றிய விவாதம் வரும்போதே அறிவிக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா அண்மையில் கூறியிருந்தார்.இந்த நிலையிலேயே இந்தியாவின் ஆதரவை உறுதிசெய்து கொள்வதற்காக மூத்தஅமைச்சர் டியூ.குணசேகரவை ஜனாதிபதி புதுடில்லிக்கு அனுப்பி வைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஆயர் சுவாம்பிள்ளையுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பஸ்ரிசியா ஏ. புட்டேனிஸ் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிற்கான ஒருநாள் விஜயத்தின் போது மட்டக்களப்பு,திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையைச் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து கேட்டறிந்துள்ளார்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் உரையாடிய அமெரிக்கத் தூதுவர், குறிப்பாக கிறிஸ் மனிதன் தொடர்பான சம்பவங்கள் குறித்தும் கேட்டறிந்ததாக தெரியவருகிறது

# இலங்கையின் உண்மைநிலையை அறிய சுஷ்மா குழுவின் பயணம் வழிவகுக்கும்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)

**இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இதன்மூலம் நாட்டின் நிலைமையை இந்திய எதிர்க்கட்சித தலைவிக்கு நேரில் பார்த்து புரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என்று சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விபரிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எப்போதும் இல்லாதவாறான நெருங்கிய உறவு தற்போது இருந்துவருகின்றது.

கடந்த 1988 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு கைவிடுதல் என்ற நிலையிலேயே காணப்பட்டது.

ஆனால் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு நெருக்கமான போக்கை கொண்டுள்ளது.

முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் இருக்கும் போது காங்கிரஸ் கட்சியுடன் உறவைக் கொண்டிருந்தார். ஜே.ஆர் ஜயவர்த்தன ஆட்சியில் இருக்கும்போது பி.ஜே.பி. கட்சியுடன் உறவைக் கொண்டிருந்தார்.

ஆனால் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது அரசாங்கமோ இந்திய ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என முழு இந்தியாவுடனேயே நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது.

அந்த வகையில் இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினரின் விஜயமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருதரப்பு உறவின் ஆழத்தை வெளிக்காட்டுவதாகவும் அமையும் என கருதுகின்றோம்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவரின் விஜயமானது சிறந்த ஆரோக்கியமான நிலையை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.அத்துடன் இலங்கையின் உண்மை நிலையை அவர்கள் புரிந்து கொள்ளவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்று நம்புகின்றோம் என்றார்

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காது இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாது

## மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்காது நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாது என மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ. லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

மூன்று தசாப்த காலமாக நீடித்து வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் அதற்கு நிகரான பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருக்கின்றது.

போர் நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையில் அனைவரினதும் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது.

முகாம்களிலும், சிறைகளிலும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 800க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 700க்கும் மேற்பட்டவர்கள் மலையக பெருந்தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# எவருடைய அழுத்தங்கள் வந்தாலும் அறிக்கையை அவசரமாக வெளியிடமாட்டோம்

## நல்லிணக்க ஆணைக்குழு திட்டவட்டம்



(கொழும்பு)

அமெரிக்கா அல்ல எவருடைய அழுத்தம் வந்தாலும் அவசரப்பட்டு நாம் அறிக்கை வெளியிடப்போவதில்லை. எமது நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக இருப்போம் என நல்லிணக்க ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இலங்கை வரும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓபிளேக் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகப் பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்த நிலையில், நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை விரைவில் வெளியிடுமாறு அழுத்தம் வந்தால் ஆணைக்குழுவின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என ஊடகவியலாளர்கள் கேட்டபோதே ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நவம்பர் மாதம் முதல்வாரத்தில் நாம் அறிக்கையை வெளியிட உத்தேசித்துள்ளோம். சற்றுத் தாமதமானாலும் அதற்கு முன்னர் வெளியிடமாட்டோம். எமது நிலைப்பாட்டில் நாம் சற்றேனும் தளராது இறுதிவரை செயற்படுவோம். அமெரிக்கா அல்ல. யார் அழுத்தம் கொடுத்தாலும் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நாம் அறிக்கை வெளியிட மாட்டோம். அதற்கான நேரமும் எமக்கில்லை எனத் தெரிவித்தார்.

### இலங்கை யாத்திரிகர்களுக்கு இந்தியாவில் விசேட ரயில்

(கொழும்பு)

இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் இலங்கையின் யாத்திரிகர்களுக்கான விசேட ரயில் சேவையொன்றை இவ்வருட நவம்பர் மாதம் முதல் நடத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சென்னையிலிருந்து புத்தகாயா, சாதானாத், கபிலவஸ்து, சாஞ்சி மற்றும் குஷிநகர் ஆகிய பௌத்த மத வழிபாட்டுத் தலங்கள் நோக்கி இந்த ரயில் சேவை நடத்தப்படவுள்ளது. இதன்போது இலங்கையின் உணவு வகைகளை யாத்திரிகர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பலாலி காணிக் குடியிருப்பாளருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு

## யாழ்.கட்டளைத் தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான சகல அதியுயர் பாதுகாப்பு வலயங்களும் நீக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் பலாலி விமான நிலையப் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் பிரதேசத்தில் மாத்திரமே மக்கள் மீளக்குடியமர்த்தப்படாதுள்ளனர். இவர்களுக்கு நஷ்டஈடு வழங்கி மாற்று இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என யாழ்.குடாநாட்டுக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பிரதேசங்களில், மோதல்களின் போது இடம்பெயர்ந்திருந்தவர்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர். இது விடயமாக நீதி அமைச்சினூடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## 11 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேகந்த மடவள எனும் பிரதேசத்தில் 11வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவரை கட்டுநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தீவிர விசாரணைக்கு உட்படுத்திய கட்டுநாயக்க பொலிஸார் அவரை மினுவாங்கொட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் விசாரணை

(கொழும்பு)

சிறைச்சாலை திணைக்களத்தில் இலஞ்சம் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிறை உயர் அதிகாரிகள் நால்வருக்கு எதிராக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது

விரைவில் ஓய்வு பெறவுள்ள அதிகாரி ஒருவர் இதில் இருப்பதாகவும் இவருக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் பல இருப்பதாகவும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் விசேட விசாரணைப் பிரிவிற்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசேட விசாரணைப் பிரிவிற்கு 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை சிறைச்சாலையின் உயர்அதிகாரிகளுக்கு எதிரானவை என்றும் அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## டெங்கை கட்டுப்படுத்த பாகிஸ்தான் உதவி

(கொழும்பு)

டெங்குப் பரவல் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு இலங்கைக்கு உதவியளிக்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

அரசாங்கம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி, டெங்கு நோய்த்தொற்றுக்கு எதிராக இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக பஞ்சாப் மாகாணம் மருந்துகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களையும் வழங்க முன்வந்துள்ளதாக மாகாண ஆளுநர் ஷகீப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயின் கடத்திய பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது

(கொழும்பு)

சமையலறை உபகரணங்கள் இரண்டில் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்து விமானம் மூலமாக அதனை கடத்தி வந்த பெண் ஒருவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆயுள் தண்டனை விதித்தார்.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவருக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதிவாதி சமையலறை உபகரணங்கள் இரண்டில் 130 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்து இலங்கைக்குக் கடத்தி வந்த போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதிவாதி தனக்கெதிராக சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களையும் நீதிமன்றில் ஏற்றுக்கொண்டதையடுத்து இத்தண்டனை வழங்கப்பட்டது.


## தீ விபத்து

(கொழும்பு)

புத்தளம் கல்குளம் பகுதியில் ஏற்பட்ட தீயினால் தும்புத் தொழிற்சாலையொன்றிற்கு பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட இந்தத் தீயினால் 50 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் புதிய தண்ணீர்த்தாங்கி அமைப்பு



(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி, ஆலயத்தின் சூழலில் புதிய தண்ணீர்த்தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவான சிவசிறி நகுலேஸவரக் குருக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத தண்ணீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர்தாங்கி நிர்மாணிப்பதற்கான மூன்று இலட்சம் ரூபாவினை சிலோன் பிஸ்கட் லிமிடெட் வழங்கிய அதேவேளை, இதனை நிர்மாணிக்கும் பொறுப்புக்கான இணைப்பாளராக 515 ஆவது பிரிகேட் செயற்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் தண்ணீர்த்தாங்கி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்பு முகாமையாளர் ஜானக போத்தி, விற்பனை மேற்பார்வையாளர்களான தயாளன், அன்ரன, 515 பிரிகேட் சிவில் அலுவலர் லெப்ரினன்ட் கேணல் ரஞ்சித் ஏக்கநாயக்க, வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

513 ஆவது பிரிகேட் கேட்டுக்கொண்டதற்கிணங்க கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிலோன் பிஸ்கட் நிறுவனத்தினரால் இளவாலைப் பகுதியில் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழில் வீதி அபிவிருத்திக்கு உபகரணங்கள் கையளிப்பு




(கொழும்பு)

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக உரிய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் கடந்த எட்டாம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர்களிடம் உபகரணங்களைக் கையளித்துள்ளார்.

இவ்உபகரணங்கள் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதியின் அவசர முன்னேற்றம் தொடர்பான செயற்திட்டத்தின் ஊடாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் வழங்கப்பட்டிருந்தது. இதன் பெறுமதி 34 மில்லியன் ரூபாவாகும்.

மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.ஈ.எஸ்.ராஜேந்திரா, மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம், பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் மற்றும் பல அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மூளைச்சலவை செய்வதற்கே பயிற்சி- சஞ்சீவ பலவந்தமாக பயிற்சியளிக்கவில்லை - சுனில்

(கொழும்பு)

மூளைச் சலவை செய்யும் நோக்கில் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சஞ்சீவ பண்டார குற்றம் சுமத்தியுள்ளார். எந்தத் தரப்பினரிடமும் கருத்துக் கோராமல் பலவந்தமாக மாணவர்களுக்கு இவ்வாறு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவியர் உடல், உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். மூன்று வாரங்களில் தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலவந்தமாக எவருக்கும் பயிற்சி அளிக்கவில்லை என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

மூளைச் சலவை செய்யப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் நோக்கில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக கட்டமைப்பில் அடிப்படை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியின் ஓர் கட்டமாக இந்தத் தலைமைத்துவப் பயிற்சி நடவடிக்கைகள் கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

## வட,கிழக்கில் சட்டவிரோத மதுபாவனை அதிகரிப்பிற்கு அதிகாரிகளும் காரணம்

### பிரபல தொழிலதிபர் குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள சட்டவிரோத மதுபானப் பயன்பாட்டிற்கு, மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் உடந்தையாகச் செயற்பட்டு வருகின்றனரென பிரபல தொழிலதிபரும், டிஸ்டிலரிஸ் நிறுவனத்தின் தலைவருமான ஹரிஜெயவர்த்தன குற்றஞ் சுமத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்குக் கிழக்கில் சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைப் பயன்பாடு உயர்வடைந்துள்ளது. சட்டவிரோதமான வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் செயற்கை ரொடிரக மதுபானங்களினால் அரசாங்கம் வருடாந்தம் பெருமளவு வரியை இழக்க நேரிடுகிறது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் போன்றே தொடர்ந்தும் சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு இடம்பெற்று வருகின்றது. அனுமதிப்பத்திரமற்ற கள் விற்பனை அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

# இலங்கைக்கு எதிராக தீர்மானம் எடுத்தால் ஐ.நாவுக்கு எதிராக போராட்டம் வெடிக்கும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தின் அமர்வில் எத்தீர்மானம் எடுத்தாலும் அதற்கு இலங்கை ஒருபோதும் அடி பணியாது.

மீறி அழுத்தங்களையோ தலையீடுகளையோ மேற்கொள்ள நினைத்தால் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை சர்வதேச நாடுகளும் ஐ.நா.வும் எதிர்கொள்ள நேரிடும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில், சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தீவிரமான முறையில் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

சர்வதேச நாடுகளின் தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

சர்வதேசத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு கிடையாது.

ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐ.நா.மனித உரிமை சாசனத்தின் அமர்வுகளை இலங்கைக்கு எதிரான களமாக பயன்படுத்த பல நாடுகள் சூழ்ச்சி செய்கின்றன.

நாட்டின் மனித உரிமைப் பிரச்சினைகள் மற்றும் ஜனநாயகப் பிரச்சினை என்பன உள்நாட்டு விடயங்களே தவிர இவற்றில் ஐ.நா.வோ சர்வதேசமோ தலையிடுவதை அனுமதிக்க முடியாது.

எனவே, ஜெனீவா அமர்வுகளில் எவ்வகையான தீர்மானங்களை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டாலும் அவற்றுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை.

இந்த அமர்வுகளில் பங்கேற்றுள்ள இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு சார்பாக செயற்பட்டு விடக்கூடாது தீர்மானங்களை மேற்கொண்டு தலையீடுகளை ஏற்படுத்தும் போது அவற்றுக்கு எதிராக கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க தயாராக வேண்டும் எனக் கூறினார்.

# அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட 44 பேரும் புலனாய்வு விசாரணையின் பின்னரே ஆஜர்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு செல்ல முற்பட்டு நேற்றையதினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் 44 பேரும் 24மணி நேரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதன் பின்னரே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று இலங்கைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி கூறியுள்ளார்.

மேலும், கடல் வழியாக நாட்டை விட்டு வெளிறே முயன்ற இந்த 44 பேருக்கு எதிராகவும் குடிவரவு குடியகல்வு சட்ட விதிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒருசிலர் போலி வாக்குறுதிகளை வழங்கி பணத்துக்காக இவ்வாறு ஆட்கடத்தல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இதனைத் தவிர்க்குமாறு அரசு வலியுறுத்தி வருவதுடன் அதற்கான விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் டீ.டபிள்யூ.ஏ.எஸ் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கோம்பாவிலில் மக்கள் குடியேற்றம் முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது

## முல்லை அரச அதிபர் பத்திநாதன்

(முல்லைத்தீவு)

வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களை கோம்பாவிலில் குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையானது எந்தவிதமான திடீர் நடவடிக்கையும் இல்லையென முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பத்திநாதன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இம்மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இரு மாதங்களுக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டதாகவும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே மெனிக்பாமிலுள்ள மக்களை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள கோம்பாவில் பகுதியில் மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.


கோம்பாவில் பகுதியில் 600 ஏக்கர் காட்டுப்பகுதி துப்புரவாக்கப்பட்டு அங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 700 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே கோம்பாவில் பகுதியில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் சுமார் 2 மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இது ஒரு திடீர் நடவடிக்கை இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகிறன. கரைதுறைபற்று, தண்ணிமுறிப்பு உள்ளிட்ட 5கிராம சேவகர் பிரிவுகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வ[...]கின்றன. இம்மாத இறுதிக்குள் இப்பணிகள் முடிவுக்கு வரவிருப்பதுடன் அதன் பின்னர் மீள்குடியேற்றம் இடம்பெறும்.

எனினும் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள முடியாது என்பதால் அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களை கோம்பாவில் பகுதியில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# கொழும்புக் காணிகளை அரசாங்கம் விற்பனை செய்யும் அவசியமில்லை

## ஜனாதிபதியின் செயலர்



(கொழும்பு)

கொழும்புக் காணிகளை அரசாங்கம் விற்பனை செய்யாது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் குற்றம் சுமத்துவதனைப் போன்று, கொழும்புக் காணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது.

கொழும்பின் அபிவிருத்திப் பணிகள் ஆசிய பிராந்திய வலய நாடுகளில் முதனிலை வகிக்கின்றது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ, கொழும்பு நகரை எழில்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்நாட்டு பிரச்சினையை தீர்த்திருந்தால் உலகத்திற்கு பயப்படத் தேவையில்லை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

உள்நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு கண்டிருந்தால் இன்று உலக நாடுகளுக்கு பயப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மனித உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்தை நிலைநாட்டவும் ஜே.வி.பி தொடர்ந்தும் அரசை வலியுறுத்தும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மாநாடு தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு எதிராகப் பிரேரணை முன்வைக்கப்படும் எனப் பரவலாகப் பேசப்படுகின்றது. சர்வதேச சமூகத்தின் இந்த நடவடிக்கையில் இருந்து தப்பிக் கொள்வதற்கு அரசு நாடுநாடாகச் சென்று உதவி கோருகின்றது. உள்நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டிருந்தால் இவ்வாறானதொரு நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்காது.

வடக்கு,கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கி, மனித உரிமைகளை நாட்டில் பாதுகாத்து, ஜனநாயகத்தை அரசு நிலைநாட்டியிருந்தால் இன்று சர்வதேச அழுத்தத்துக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. இதைத்தானே நாமும் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தோம்.

அதேபோன்று அவசரகாலச் சட்டத்தை நீக்கியுள்ள அரசு தொடர்ந்தும் தமிழ் இளைஞர், யுவதிகளைத் தடுத்துவைத்துள்ளது. இவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் எதையும் உள்நாட்டில் செய்யாமல் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியாது. இதனைப் புரிந்துகொண்டு அரசு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவது அவசியம்

(கொழும்பு)


சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தொடர்ந்து வலுப்படுத்த வேண்டியது அவசியம் என கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பியகம தொகுதியில் உள்ள கட்சியின் ஆதரவாளர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதற்காக மாகொல பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

60 வருடங்களை பூர்த்தி செய்துள்ள கட்சியை எதிர்வரும் 60 வருடங்களுக்கு எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பதனை கருத்திற்கொண்டே கட்சியின் முக்கியஸ்தர்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படாமல் எதிர்கால சந்ததியினருக்கு அரசியல் செயற்பாட்டின் அடிப்படை விடயங்கள், கொள்கைகள் மற்றும் நோக்கங்களை தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இராணுவத்தின் இலவசமருத்துவ முகாமில் 800 இற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவு



(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாஜன சபா மண்டபத்தில் இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவினர் ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாமில் சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை இராணுவத்தின் 51ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பசுபதிராஜா பவானி, கொழும்பு ஹேமாஸ் நிறுவனம், யாழ்ப்பாணம் விஷன் கெயா ஒப்சன் ஆகியோரின் அனுசரணையுடன் இந்த இலவச மருத்துவ முகாம் நடாத்தப்பட்டது.

இந்த மருத்துவமுகாமில் யாழ்,மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த சிறப்பு வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் கலந்துகொண்டு சிகிச்சையை வழங்கினர். இதில் பாடசாலை மாணவர்கள்,பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

குறிப்பாக அனேகமானவர்களுக்கு கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்கான மருந்துகள் வழங்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோருக்கு யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சையை மேற்கொள்ளும் வகையில் கிளினிக்குக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

# மணப்பெண் தேவை



உலகிலேயே உடலில் அதிகளவு உரோமம் கொண்ட நபர் தான் திருமணம் செய்துகொள்ள மணப்பெண் தேடுகிறார். சீனாவைச் சேர்ந்த யூ சின்குன் எனும் 33 வயது மனிதரே உலகிலேயே அதிகளவு உரோமங்களைக் கொண்டவரா வார்.

இவரது உடலில் 96 வீதத்துக்கு உரோமம் மண்டிக் கிடக்கிறது. இவர் உலகிலேயே அதிகளவு உரோமம் உடைய நபரென 2002 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரு வருடங்களாக இவர் ஒரு பெண்ணைக் காதலித்து வந்துள்ளார். பெண்ணின் பெற்றோரின எதிர்ப்பால் இவர் தனது காதலியைப் பிரியவேணடியேற்பட்டது.

இந் நிலையில் இவர் திருமணத்துக்கு பெண் தேடுகிறார். ஒருமுறை உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அங்கு பணியாற்றிய தாதியர்களின் பழக்கவழக்கங்கள் பிடித்துப்போகவே, தான் ஓர் தாதியையே மனைவியாக்கிக் கொள்ளப்போவதாக விருப்பம் தெரிவித் துள்ளார்.

# பூச்சிய நாடு

நேரு பெர்ட்ரண்ட் ரஸ்ஸலைச் சந்தித்தபோது பூச்சிய நாட்டிலிருந்து வருகின்ற உங்களை நான் வரவேற்கிறேன் என்றார் ரஸல். ஒன்று மில்லாத நாட்டிலிருந்து வருகின்றவர் நீங்கள் என்று ரஸல் கூறுவது போல இருந்தது. நேரு ஒரு கணம் திகைத்தார்.

ரஸல் விளக்கினார்: கணித சாஸ்திரத்தில் பெரிய மேதைகளைப் பெற்ற நாடு உங்களுடையது. **பூச்சியம்** என்கிற எண்ணைக் கண்டு பிடித்து உலகத்துக்கு கொடுத்ததே இந்தியா தான். அந்தப் பெருமையை நினைவுபடுத்தும் வகையில் தான் அப்படிச் சொன்னேன் என்றார். நேரு அமைதியானார்.



# இரண்டு மூக்குகள்

கண்கள் இரண்டாக இருக்கலாம் காதுகள் இரண்டாக இருக்கலாம் மூக்கு இரண்டாக இருந்தால் எப்படியிருக்கும்? பொதுவாக மனிதன் மற்றும் மிருகங்களுக்கு இயற்கையாக இருப்பது ஒரே ஒரு மூக்கு. ஆனால் அண்மையில் இரண்டு மூக்குகளுடன் பிறந்துள்ளது ஒரு பன்றிக்குட்டி. சீனாவின் வட மாகாணமான ஜிலின் மாகாணத்தில் டிசிங்டாங் பகுதியில இந்த பன்றி காணப்படுகிறது. இறைச்சிக்காக பன்றிகளை வளர்க்கும் லீ சென்யுன் என்பவரது பண்ணையில இந்தப் பன்றி வாழ்ந்து வருகின்றது.



இரண்டு மூக்குகள் இருப்பதனால் உணவு மற்றும் பால்குடிப்பதற்கு இது மிகவும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது. எனவே இதன் பரிதாப நிலையை புரிந்துகொண்ட பண்ணை யார்கள் இதனை இறைச்சிக்காக வெட்ட அனுமதிக்கவில்லை: இப்பன்றி அங்கு வருபவர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

# பாரிசவாதத்திலிருந்து மீள...



திமிர்வாதம் அல்லது பாரிசவாதம் என்ற நோயினால் பீடிக்கப்பட்டு படுக்கை யிலேயே பல வருடங்களைக் கழித்து மரணமடைவோரின் எண்ணிக்கை அதிக ரித்து வருகின்றது.

தினமும் பசுப்பால் அருந்துவதன் மூலம் பாரிசவாதத்தால் பீடிக்கப்படுவதற்கான வாய்ப்பை குறைத்துக்கொள்ளலாம் என்று ஜப்பானில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஒன்று கூறுகின்றது.

நடுத்தர வயதுடைய 3150 பேரை இவ்வாராய்ச்சிக்கு உட்படுத்திய போது தினமும் ஆகக் குறைந்தது இரண்டு கோப்பை பால்குடித்தவர்களை விட, ஒரு கோப்பை பாலையாவது குடிக்காதோர் பாரிசவாதத்தால் பீடிக்கப்படுவதற்கான வாய்ப்பு இரு மடங்காகுமென கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்குப் பசுப்பாலிலுள்ள கல்சியமும், கண்டறியப்படாத சில போஷணைப் பதார்த்தங்களுமே காரணமென்கிறது ஆராய்ச்சிக்குழு.



# சந்திரனை முழுமையாக ஆராய

சந்திரனுக்கு அமெரிக்கா முதன் முதலாக மனிதனை அனுப் பியது. தற்போது அங்கு முழுமையாக ஆராய்ச்சி நடத்த நாஸா திட்டமிட்டுள்ளது. சந்திரனின், புவிஈர்ப்புத் தன்மை மற்றும் அதன் அமைப்பு குறித்த முழு தகவல்க ளும் திரட்டப்படவுள்ளது. அதற்காக அதி நவீன திறன் கொண்ட 2 செயற்கைக் கோள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



இதற்காக ரூ.22 ஆயிரத்து 500 கோடி செலவில் வோஷிங் மெஷின் போன்ற 2 செயற்கைக் கோள்கள் தயாரிக்கப்பட் டுள்ளன. இந்த செயற்கை கோள் கேப் கானவரலில் உள்ள விமானப் படை தளத்திலிருந்து நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப்பட்டது. அவற்றை டெல்பா-2 என்ற ரொக்கெட் மூலம் விஞ்ஞானிகள் செலுத்தினர். இந்த ரொக்கெட் 3 மாத பயணத்துக்கு பிறகு சந்திரனை சென்றடையும்.



# சுவையான பசுப்பால்

காலத்தின் கோலத்தால் உலகம் சந்திக்கும் விந்தைகளுக்கு அளவே இல்லாமல் குழந்தை பிறந்தால் அதற்கு முதல் மருந்தும் உணவும் தாய்ப்பால்தான் என்று கூறுவார்கள். ஆனால் கம்போடியாவில் 20 மாதக் குழந்தை நேரடியாக பசுவிடமிருந்து மடிப்பால் உறிஞ்சிக்குடிக்கும் சம்பவம் அனைவரையும் வியப்புக்கு உள்ளாக்கியுள்ளது..

கம்போடியாவில் பிறந்து 20 மாதங்களே ஆன தா சோபட் எனும் குழந்தை இதனுடைய பெற்றோர்கள் வேலை தேடுவதற்காக தமது கிராமத்தினை விட்டு ஜூலை மாதம் தாய்லாந்து நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர். செல்லும் போது தமது 20 மாதமான குழந்தையை தங்களது பெற்றோருடன் விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் குறித்த குழந்தை அங்குள்ள பசுவின் கீழ் தானே சென்று அதன் மடியினை கவ்வி பால் அருந்தியுள்ளது.

பசுவும் தாய்மைக்கு பறைசாற்றும் முகமாக எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படுத்தாமல் குழந்தைக்கு பால் கொடுத்து வருகின்றது. தமது பேரக்குழந்தையின் செயற்பாட்டை கண்ட தாத்தா, பாட்டி இதை கண்டித்துள்ளனர்.

இருந்தும் குழந்தை தொடர்ச்சியாக அடம்பிடித்துள்ளது. எனவே குழந்தையை அப்படியே விட்டுள்ளார்கள். எனினும் இதுபற்றி கருத்து தெரிவித்த குழந்தையின் தாத்தா பாட்டி குழந்தை தனது மடிப்பாலை குடிப்பது பற்றி பசு கவலைப்படவில்லை இருந்தாலும் குழந்தையின் ஆரோக்கியத்தை நினைக்கும் போது எங்களுக்கு கவலையாக இருக்கிறது என்றார்கள்.

# கணினியிலிருந்து இலவசமாக SMS அனுப்ப இலவச மென்பொருள்

இலவசமாக குறுந்தகவல் அனுப்ப இணையத்தில் இருக்கும் ஒரு தளம் தான் Way2sms.com. இதைப் பற்றி நிறையப் பேருக்குத் தெரிந்திருக்கும். இந்தத் தளத்தில் சென்று Signup/Register செய்து கொள்ள வேண்டும். இதில் உங்கள் மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண் போன்றவற்றைக் கொடுக்க வேண்டும். பின்னர் உங்கள் கணக்கை உறுதிப்படுத்த மொபைலுக்கு இரகசிய எண் அனுப்பு வார்கள். அதைக் கொடுத்தால் உங்கள் கணக்கு ஆக்டிவேட் செய்யப்படும்

பின்னர் இந்தத் தளத்திலேயே சென்று யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக SMS அனுப்பலாம். இத்தளத்தில் அதிகமாக இடம் முழுவதும் நிறைக்கிற மாதிரி விளம்பரங்கள் காணப்படுவதால் உங்களுக்கு எரிச்சலாக இருக்கும். அது மட்டுமின்றி அந்த தளத்தில் நுழையாமலே SMS அனுப்புகிற மாதிரி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இதற்காகத் தான் ஒரு இலவச மென்பொருளைப் பயன்படுத்தப் போகிறோம்.

இதைப் பயன்படுத்த. நெட் வசதி இருந்தால் போதும். இந்த மென்பொருளை ஓப்பன் செய்து அதில் உங்களுடைய Way2sms கணக்கின் username/ Mobile no மற்றும் Password கொடுத்தால் போதும். கனெக்ட் ஆகிவிடும். பின்னர் நீங்கள் அந்த தளத்திற்கு செல்லாமலே டெஸ்க்டோப்பில் இருந்து கொண்டே யாருக்கு வேண்டுமானலும் இலவசமாக SMS அனுப்பலாம்.

இதில் 140 எழுத்துகளுக்குள் அனுப்பலாம். ஒரேநேரத்தில் பல பேருக்கு அனுப்ப வேண்டுமெனில் ஒவ்வொரு நம்பரையும் Semicolon(;) போட்டு பயன்படுத்த வும். மேலும் இந்த மென்பொருளிலேயே நண்பர்களின் மொபைல் எண்களைச் சேமித்து வைத்துக் கொள்ளலாம். இதனால் எளிமையாகவும் வேகமாக வும் நண்பர்களுக்கு குறுந்தகவல்களை அனுப்பலாம்.

தரவிறக்கச்சுட்டி: Download way2sms Desktop client (700 kb only)

இதைப் பயன்படுத்த கணினியில் மைக்ரோசோப் டின் டாட் நெட் சப்போர்ட் இருக்க வேண்டும். விண்டோஸ் 7 பயன்படுத்துபவர்களுக்கு டாட் நெட் வசதி அதிலேயே இருக்கும். முதலில் SMS Client மென்பொருளைத் தரவிறக்கி ஓப்பன் செய்யுங்கள். மென்பொருள் திறக்காவிட்டால் டாட் நெட் கீழே சென்று தரவிறக்கிக் கொள்ளுங்கள். Download Microsoft dot net framework 4

கணினி மூலை

# ஒரிசாவில் மழை வெள்ளம் 11 இலட்சம் மக்கள் பாதிப்பு

## இதுவரை 8 பேர் உயிரிழப்பு



(புவனேஷ்வர்)

ஒரிசா மாநிலத்தில், மழை வெள்ளம் காரணமாக, 19 மாவட்டங்களைச் சேர்ந்த 11 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எட்டுப் பேர் பலியாகியுள்ளனர் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். மாநில அரசு, போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஒரிசா மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. மகாநதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஷிராகுட் அணை நிரம்பி வழிகிறது.

அணையிலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், மகாநதி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. மழை, வெள்ளம் காரணமாக, அம்மாநிலத்தில், 19 மாவட்டங்களைச் சேர்ந்த 11 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை, வெள்ளத்திற்கு இதுவரை எட்டுப் பேர் பலியாகியுள்ளனர் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். தாழ்வான பகுதிகளில் வசித்த மக்கள் 61 ஆயிரம் பேர், பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்கள், படகுகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர். மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை, ஒரிசா மாநில அரசு போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறது. 152 வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# இலஞ்சம் பெறும்போது கைப்பற்றிய நான்கு கோடி பணம் சி.பி.ஐ. வசம்

(புதுடில்லி)

அரசு ஊழியர்கள் இலஞ்சம் வாங்கும்போது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட 4.25 கோடி ரூபாய் பணம், சி.பி.ஐ., கைவசம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக 2008 இல் 129 வழக்குகளும், 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தலா 107 வழக்குகளும், கடந்த ஆண்டு 87 வழக்குகளும் சி.பி.ஐ.,யால் பதிவு செய்யப்பட்டன.


இலஞ்சம் கேட்பதாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில், சி.பி.ஐ., உள்ளிட்ட அமைப்பின் அதிகாரிகள் விரைந்து சென்று கையும் மெய்யுமாகப் பிடித்து, அவர்களிடமிருந்து லஞ்சப் பணத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

வழக்கு விசாரணை முடிந்ததும், இலஞ்சம் கொடுத்தவர்களிடம் மீண்டும் இந்த பணம் ஒப்படைக்கப்படும். இந்த வகையில் கடந்த நான்கு ஆண்டுகளாக சி.பி.ஐ., பறிமுதல் செய்த பணத்தை மீண்டும் ஒப்படைக்கவில்லை.

எனவே, தற்போது சி.பி.ஐ. யிடம் இந்தப் பணம் 4 கோடியே 25 இலட்ச ரூபாய் அளவுக்கு சேர்ந்துள் ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியச் செய்திகள்

# பரமக்குடியில் கலவரம் 1000 பேர் மீது வழக்கு



(சென்னை)

தமிழகம் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. பரமக்குடிக் கலவரத்தில் ஈடுபட்டதாக 1000 பேர் மது வழக்குத் தாக்கல் செய்யபபட்டுள்ளது.

இம்மானுவேல் சேகரன் நினைவு நாளல் பங்கேற்க பரமக்குடி புறப்பட்ட தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான்பாண்டியன் வல்லநாடு அருகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து எதிர்ப்பு தெரிவித்து பரமக்குடியில் இவரது ஆதரவாளர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

கலைந்து செல்ல வலியுறுத்திய போது பொலிஸாருக்கும், அவர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.

தொடர்ந்து வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார். தடியடி, கணணீர்ப்புகை வீசினர். இறுதியில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

மதுரை ரிங்ரோட்டிலும் பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டது. இந்த இரு வன்முறையில் ஈடுபட்ட 6 பேர் துப்பாக்கிச்சூட்டில் பலியாயினர்.

பலர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்னும் பொலிஸாரின் தாக்குதலில் காயமுற்ற பலர் ஆபத்தான நிலையில் உள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டிற்கு முன் பஜனைப் போராட்டம்

## அன்னா ஹசாரே அறிவிப்பு



(சென்னை)

நாடாளுமன்ற நிலைக்குழுவல் உள்ள எம்.பி.க்கள் யாரெல்லாம், ஜன் லோக்பால் மசோதாவை எதிர்க்கிறார்ளோ அவர்களின் வீட்டு வாசல் முன் நின்று பஜனை பாடி, கோசம் செய்வோம். அது மட்டுமல்ல, விரைவில் வரவிருக்கும் லோக்சபாத் தேர்தலில், மீண்டும் அவர்கள் போட்டியிட்டால் எதிர்த்துப் பிரசாரம் செய்வோம் என்று, காந்தியவாதி அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிராக வலுவான மசோதா கொண்டுவர வலியுறுத்தி, டில்லியில் காந்தியவாதி அன்னா ஹசாரே நடத்திய உண்ணாவிரதம், ஆட்சியாளர்களையே ஆட்டம் காணவைத்து, வெற்றி பெற்றது. இந்நிலையில், ஹசாரேயின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றில் ஜன் லோக்பால் மசோதா தாக்கல் செய்யப்பட்டு, நாடாளுமன்றில் நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து, ஹசாரே அறிக்கை வெளியிட்டார். இந்நிலையில், ஜன் லோக்பால் மசோதா தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, காந்தியவாதி அன்னா ஹசாரே தன் குழுவினருடன் இரண்டு நாட்கள் ஆலோசனையில் ஈடுபட்டார்.





**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

மூன்றாவது அகவையில்

பெயர்: வி. ரிஷிகாந்
முகவரி: 12ம் வட்டாரம்,
நெடுந்தீவு.



**03.09.201**
**கொண்டாடினார்**

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ........................................
முகவரி : ........................................
பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ........................................ பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


### விருமாண்டி....

(13ஆம் பக்கத்தொடர்ச்சி)

அவ்வாறு யார் வாதிடுகிறார்கள் என்றா கேட்கிறீர்கள்! கீற்று இணையத் தளத்தில் ராஜீவ் கொலை குறித்து விடுதலை இராசேந்திரன் எழுதிவரும் தொடரைப் படித்துப் பாருங்கள். புலிகளின் துணைத் தலைவராயிருந்த மாத்தையாவுக்குப் புலிகள் வழங்கிய மரணதண்டனையை அவர் எவ்வாறு இரத்தம் சொட்டச் சொட்டச் சுவைபட எழுதி நியாயப்படுத்துகிறார் என்று கவனியுங்கள்.

புலிகளின் படுகொலைகள் குறித்த எனது கருத்துகள் மகிந்த ராஜபக்சவை மகிழ்ச்சியில் ஆழ்த்தக் கூடியவை என எழுதினார் எம்.எஸ்.எஸ்: பாண்டி யன். புலிகளின் படுகொலைகளை நான் சுட்டிக் காட்டுவதால் ராஜபக்ஷ மகிழ்ச்சியடைவாரானால் அதற்கான பொறுப்பு ராஜினி திரணகமவையும், நீலன் திருச்செல்வத்தையும், செல்வியையும் ஈவிரக்கமில்லாமல் கொலைசெய்த புலிகளைத்தான் சாருமேயொழிய அந்தப் பொறுப்பு தவறுளைச் சுட்டிக்காட்டும் என்னைச் சாராது. அவ்வாறானால் நான் என்ன செய்ய வேண்டும்? புலிகளைக் கண்டித்தால் ராஜபக்ஷவும், காங்கிரஸைக் கண்டித்தால் பா.ஜ.கவும், இஸ்லாமிய அடிப்படைவாதிகளைக் கண்டித்தால் அமெரிக்காவும் மகிழ்வார்கள் எனக் கருதி மூடிக்கொண்டிருக்க வேண்டுமா? ஷோபா சக்தியைக் கண்டிப்பதில் முனைவர் காட்டும் ஆர்வத்தை அவரது சக கல்வியாளர்களையும் கலைஞர்களையும் கொன்றுதள்ளிய புலிகளின் மீது எப்போதாவது அவர் காட்டியிருப்பாரா? படித்தவன் சூதும் வாதும் செய்தால் போவான் போவான் அய்யோவெனப் போவான் பாண்டியரே. இதை வயிறெரிந்துதான் சொல்கிறேன்.

# செப்ரெம்பர் 11 தாக்குதலை காரணம் காட்டி சீனாவில் 7000 பேருக்கு சிறைவாசம்

உலகச் செய்திகள்


(பீஜிங்)

அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தகர்ப்புக்குப் பின், அந்தச் சம்பவத்தைக் காரணம் காட்டி,ஏழாயிரம் பேரை சீன அரசு சிறையில் அடைத்துள்ளதாக "உலக உய்குர் காங்கிரஸ்" அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜேர்மனியில் செயற்பட்டு வரும், "உலக உய்குர் காங்கிரஸ்" அமைப்பின் தலைவர் ரெபியா காதீர், நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உய்குர் இனத்தவர் பகுதிகளில், அமைதியான முறையில் நடக்கும் அரசியல், சமூக, கலாசார நிகழ்வுகளைக் கூட, இரட்டைக் கோபுர தகர்ப்பைக் காரணம் காட்டி, சீன அரசு அடக்கி வருகிறது.பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று கூறி, கடந்த 10 ஆண்டுகளாக உய்குர் இனத்தவரின் கோரிக்கைகளை ஏற்க, சீன அரசு மறுத்து வருகிறது.சீனாவில் அரசுக்கு எதிராக நாளுக்கு நாள் போராட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், உய்குர் போராட்டங்களுக்கு மட்டும் அரசு, "பயங்கரவாதம்" என முத்திரை குத்துகிறது.கடந்தாண்டு மட்டும், உய்குர் இனத்தவர் 1,000 பேர் மீது, அமைதியைக் குலைக்க முயற்சித்ததாக நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2001ல் இருந்து இன்று வரை 7,000 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் கடும் வெள்ளம் 141 பேர் பரிதாபகரமாக மரணம்

## உலக நாடுகளிடம் உதவிக்கோரிக்கை




(இஸ்லாமாபாத்)

தெற்கு பாகிஸ்தானில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 141 பேர் பலியாயினர், 40 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்தார். சிந்து மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்துவருகிறது. இது வழக்கத்தைவிட 142 சதவீதம் அதிகம். வெள்ளப் பெருக்கு காரணமாக 21 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 17 இலட்சம் ஏக்கர் விவசாய நிலம் உட்பட மொத்தம் 41 இலட்சம் ஏக்கர் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதியில் தற்போது 4,000 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் வீடுகளை இழந்துள்ள 40 இலட்சம் பேரில் ஒன்றரை இலட்சம் பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். அதை தொடர்ந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. வெள்ளத்தால் கடுமையாக பாதித்துள்ள தங்கள் நாட்டு மக்களுக்கு உலக நாடுகள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் உதவ முன்வர வேண்டும் என்று கிலானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அமைதியான சமூகத்தை ஏற்படுத்த அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது



(சாங்ஸ்வில்லே)

ஜனாதிபதி ஒபாமா வரும் தலைமுறை யினருக்கு பயங்கரவாதம் இல்லாத அமைதியான சமுதாயத்தை அளிக்க வேண்டும். இதற்காக பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க அமெரிக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்று அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

நியூயோர்க்கில் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் விமானம் மூலம் தாக்கப்பட்டதன் நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஸ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு வானொலி மூலம் ஒபாமா நாட்டுமக்களுக்கு உரையாற்றினர். அதில் அவர் கூறியதாவது. சரியாக 10 ஆண்டுகளுக்கு முன்னார் இதே நாளில் நாம் மிகப்பெரிய சோதனையைச் சந்தித்தோம். அனைவரது மனதிலும் நீங்காத சோகத்தை ஏற்படுத்தியிருந்தபோதிலும், அமெரிக்கர்களின் மனத்தைரியமும், துணிவும் அன்றுதான் வெளிப்பட்டது.

பயங்கரவாதிகளுக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் இன்று நமது நாடு சகலவிதத்திலும் பாதுகாப்பானதாக உள்ளது. அமெரிக்கா பலமாக உள்ளது, பயங்கரவாத இயக்கமான அல்-கொய்தா அழிவை நோக்கிச் சென்றுவிட்டது. நாம் நேசிக்கும் நாட்டை உயிரைக்கொடுத்தும் பாதுகாக்கத் தயாராக இருக்கிறோம். அடுத்த தலைமுறையினருக்கு பலமான, வளமான, பாதுகாப்பான நாட்டை நாம் அளிப்போம். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்றார்.

# கடாபியின் 3ஆவது மகன் நைஜருக்கு தப்பி ஓட்டம்

(திரிபோலி)

லிபியா அதிபர் கடாபியின் 3ஆவது மகன் தப்பி ஓடி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கடாபியின் 3-வது மகன் ஷாதி கடாபி இராணுவத்துக்கு தலைமை தாங்கி புரட்சிப் படையுடன் சண்டையிட்டு வந்தார். ரத்தம் சிந்துவதைத் தடுக்க தான் சரண் அடைய தயார் என கடந்த மாதம் 21ஆம் திகதி அறிவித்து இருந்தார்.

இந்த நிலையில், அவர் லிபியாவின் பக்கத்து நாடான நைஜருக்கு தப்பியோடியுள்ளார். லிபியாவில் இருந்து இராணுவப் பாதுகாப்புடன் நியாமி நகருக்கு வந்ததாக அமைச்சர் மாருஅமாது தெரிவித்துள்ளார். கடாபியின் குடும்பத்தினர் தவிர அவரது ஆதரவாளர்கள் பலரும் நைஜரில் தஞ்சம் அடைந்துள்ளனர். கடாபியின் விமானப்படைத் தலைவர் அல்-ரிபி அலி அல் ஹரீப் உட்பட 3 இராணுவ ஜெனரல்களும், அவரது உதவியாளர்களும் நைஜரில் தங்கியுள்ளனர்.



மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு தஞ்சம் அளிக்கப்பட்டுள்ளதாக- உள்துறை பாதுகாப்புத் தலைவர் மன்சூர் டாவ் தெரிவித்துள்ளார். இவர்கள் நியாமிநகரில் வீட்டுக் காவலில் இராணுவப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

தன்னிடமிருந்த கழுதை தொலைந்ததற்காக அழுது கொண்டிருந்தார் முல்லா.

"இதற்குப் போய் இவ்வளவு வருந்துகிறீர்களே! உங்கள் முதல் மனைவி இறந்தபோது கூட இப்படி அழவில்லையே. அந்தத் துக்கத்தை விடவா இது பெரிது?" என்று சொல்லி ஊர்மக்கள் அவரைத் தேற்றினர்.

"மனைவி இறந்தபோது நீங்கள் வந்து, 'கவலைப்படாதே, வேறொரு பெண்ணை உனக்குப் பார்த்துத் தரலாம்' என்று சொன்னீர்கள். ஆனால் இதுவரையிலும் யாரும் வந்து வேறு ஒரு கழுதை வாங்கித் தருகிறோம் என்று சொல்லவில்லையே" என்று அழுதார் முல்லா.

*** *** ****** *** ****** *** ******

சேர்க்கஸில், ஒரு பெரிய சிங்கத்தின் பிடரியை ஒரு அழகிய இளம்பெண் தடவிக் கொண்டிருந்தாள். பூனைக்குட்டி மாதிரி படுத்துக் கிடந்தது சிங்கம். "வேறு யாராவது இது போல் செய்யத் தயாராயிருக்கிறீர்களா?" என்று சவால் விட்டார் சேர்க்கஸ் பொறுப்பாளர். எல்லோரும் அமைதியாய் இருக்க, ஓர் இளைஞன் முன்வந்தான். ஆச்சரியத்தோடு பொறுப்பாளர் கேட்டார் "உண்மையிலேயே நீ தயாரா?" "ஆமாம். சிங்கம் செய்ததைப் போல என்னாலும் முடியும்" என்றான் இளைஞன்.

*** *** ****** *** ****** *** ******

'கல்யாணத்துக்குப் பிறகு அவனை மாற்றிவிட முடியும்' என்ற நம்பிக்கையில்தான் ஒருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள் பெண். ஆனால், துரதிர்ஷ்டம் என்னவென்றால் அவன் கடைசிவரை அவள் எண்ணப்படி மாறுவதேயில்லை.

'அவள் மாற மாட்டாள்' என்ற நம்பிக்கையில்தான் ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறான். ஆனால், துயரம் என்னவென்றால் அவள் தலைகீழாக மாறிவிடுகிறாள்.

*** *** ****** *** ****** *** ******

பலர் ஏன் திருமணம் செய்து கொள்வதில்லை? என்ற கேள்விக்கு வார இதழொன்றில் அளிக்கப்பட்ட பதில்: "தங்களுக்குப் பிடிக்காத ஒன்றை வைத்துக்கொண்டு அவஸ்தைப் படுவதை விட, தங்களுக்கு இல்லாத ஒன்றை ஆசைப்பட்டுக் கொண்டே வாழ்நாளைக் கடத்தி விடுவது பரவாயில்லை என்று நினைத்திருக்கலாம்."

*** *** ****** *** ****** *** ******

டொக்டருக்கு ஒரு போன் வந்தது.

"டொக்டர், என் கணவர் பேனாவை விழுங்கிவிட்டார்."

டொக்டர்: "இன்னும் சில நிமிஷத்தில் அங்கே வந்துவிடுகிறேன்."

அவள்: "அதுவரை நான் என்ன செய்வது?"

டொக்டர்: "பென்சிலை உபயோகியுங்கள்."

*** *** ****** *** ****** *** ******

ராணுவ வீரன்: "மனைவியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது எனக்கு விடுமுறை தாருங்கள்"

மேலதிகாரி: "உனக்கு நாட்டை விட மனைவி முக்கியமாகப் போய்விட்டாளா?"

ராணுவ வீரன் அடக்கத்தோடு: "ஐயா, என் நாட்டை ஆயிரக் கணக்கான வீரர்கள் கவனித்துக் கொள்வார்கள். என் மனைவியைக் கவனித்துக்கொள்ள எனக்குத் தெரிந்தவரையில் நான் ஒருவனே உள்ளேன்."

விடுமுறை உடனே கிடைத்துவிட்டது.

*** *** ****** *** ****** *** ******

லொயிட் ஜோர்ஜ் இங்கிலாந்துப் பிரதமராக இருந்தபோது ஒரு கூட்டத்தில், "எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டும்" என்றார்.

"நரக லோகத்திற்கு?" என்று கூட்டத்தில் ஒருவன் கேலியாகக் கேட்டான்.

"இப்படித்தான் ஒவ்வொருவரும் தமது நாட்டுக்காகப் பரிந்து பேசிக் குரல் கொடுக்க வேண்டும்" என்றார் லொயிட் ஜோர்ஜ்.

*** *** ****** *** ****** *** ******

டெல்லிச் சிறைச்சாலையில் உண்மையில் நடந்த சம்பவம் இது. யாரோ ஒரு வள்ளலின் உபயத்தில் ஒருநாள் முழுவதும் கைதிகள் தொலைக்காட்சி பார்ப்பதற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். அடுத்த நாள், எப்படியிருந்தது என்று கேட்டதற்கு ஒரு கைதி சொன்ன பதில்: "இதுவும் தண்டனையின் ஒரு பகுதி என்று நினைத்தேன்."

*** *** ****** *** ****** *** ******

புத்தரின் முகத்தின் மீது ஒருவன் எச்சில் துப்பிக் கொண்டே இருந்தான். புத்தரோ அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை. புத்தரின் சீடர் ஒருவர் புத்தரிடம் கேட்டார். அதற்கு புத்தர் சொன்னார்: "என் முகத்தில் உள்ள எச்சிலைத் தண்ணீரால் கழுவி மிகச் சுலபமாக சுத்தம் செய்துகொள்ள முடியும். ஆனால் இவருடைய விஷயம் அவ்வளவு சுலபம் அல்ல. தன்னிடம் இருக்கும் அழுக்கு தீரும் வரை அவர் துப்பட்டும்.

# ஷோபா சக்தியின் வலைப்பதிவிலிருந்து...



# விருமாண்டியிஸம்

சில வருடங்களிற்கு முன்பு கமல் ஹாஸனின் 'விருமாண்டி' திரைப்படம் வெளியானபோது அந்தத் திரைப்படம மரணதண்டனை ஒழிப்பைக் குறித்துப் பேசும் மகத்தான திரைப்படம் என ஊடகங்கள் அடித்த அடியில் தாரை தப்பட்டைகள் கிழிந்தன. அப்போது 'விருமாண்டி' திரைப்படம் குறித்து பிரேம் எழுதிய கருத்துகள் விருமாண்டியின் யோக்கியதையைத் துல்லியமாக வெளிப்படுத்தின. பிரேம் அதை எந்தப் பத்திரிகையில் எழுதியிருந்தார் என்பதும் அவர் எடுத்தாண்ட சொற்களும் எனது ஞாகத்தில் இப்போது தெளிவாக இல்லையாயினும் பிரேமின் மையக் கருத்து என் மனதில் அழியாமல் தங்கியுள்ளது. அதை எனது வார்த்தைகளில் கீழே தருகிறேன்.

'கொத்தாளத் தேவனின் சதியில் சிக்கிய விருமாண்டி, கொத்தாளத் தேவன் நடத்தி முடித்த கொலைகளுக்கு நீதிமன்றத்தால் பொறுப்பாக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்படுகிறான். கொத்தாளத் தேவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அவனும் அந்தச் சிறையில் அடைக்கப்படுகிறான். சிறையில் கலவரத்தைத் தூண்டிவிட்டு கொத்தாளத் தேவன் விருமாண்டியைக கொல்ல முயல்கிறான். இறுதியில் கொத்தாளத் தேவன் விருமாண்டியால கொல்லப்படுகிறான். நீதிபதி வி.ஆர். கிருஷ்ணையரின் உரையோடு படம் தொடங்கி மரணதண்டனைக்கு எதிரான விருமாண்டியின் சன் டிவி நேர்காணலோடு படம் முடிகிறது. இங்கே நிரபராதியான விருமாண்டிக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை எவ்வளவு கொடியதோ அவ்வளவு கொடியது விருமாண்டியால கொத்தாளத் தேவனுக்கு வழங்கப்பட்ட மரணம். மரணதண்டனை ஒழிப்புக்கான குரல் என்பது நிரபராதியான விருமாண்டி மட்டுமல்ல, குற்றவாளியான கொத்தாளத் தேவனும் உயிர் வாழ்வதற்கான நியாயங்கள் குறித்துப் பேசுவதே. எனவே விருமாண்டி திரைப்படம் மரணதண்டனை ஒழிப்பு என்ற போர்வையில் எடுக்கப்பட்டிருக்கும் மரணதண்டனைக்கு ஆதரவான திரைப்படம். நிரபராதிக்கு மட்டும் விடுதலையைக் கோருவது மரணதண்டனை ஒழிப்பாகாது' என்றார் பிரேம்.

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருடைய கருணை மனுக்கள் சமீபத்தில் நிராகரிக்கப்பட்டபோது மரணதண்டனைக்கு எதிரான குரல்கள் மீண்டுமொருமுறை வீச்சாக ஒருங்கிணைக்கப்படலாயின. வலையுலகில் இது குறித்த உரையாடல்கள் நடந்துகொண்டிருக்கும் போது நான் என்னுடைய கருத்துகளை Facebook-ல் மூன்று சிறு குறிப்புகள் மூலம் தெரிவித்தேன்.



...என்து குறிப்புகளின் சாரத்தை இவ்வாறு சொல்லலாம்: மூவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்படக் கூடாது. இணையக் கருத்தாடல்களில் முருகன், சாந்தன் இருவரையும் தவிர்த்து பேரறிவாளன் மீதான கரிசனம் மட்டுமே அதிகளவில் வெளிப்படுவதாகத் தெரிகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். அரசுதரப்பு வாதத்தில் பல ஓட்டைகளுளளன. சதிகளில் தொடர்புடையதாக நீதிமன்றில் வலுவாக நிரூபிக்கப்படாத, பேரறிவாளன், அப்சல் குரு போன்றவர்களது மரணதண்டனை நீக்கத்திற்காக மட்டுமல்லாமல் தர்மபுரியில் மூன்று மாணவிகள் கொல்லப்பட்ட வழக்கில் மரணதண்டனைகள் விதிக்கப்பட்டவர்களிலிருந்து அஜ்மல் கசாப்புக்கு வழங்கப்பட்டிருக்கும் மரணதண்டனை வரைக்கும் எதிர்த்து நமது குரல்களை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். மரணதண்டனைக்கு எதிரான கவனம் குவிக்கப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான மரணதண்டனைகளை நியாயப்படுத்துபவர்கள் அல்லது அவற்றைக் குறித்துப் பேசாதவர்கள் அவை குறித்தும் தயவு செய்து சிந்திக்க வேண்டும். நீதிமன்றம் வழங்கும் மரணதண்டனையை மட்டுமல்லாமல் இயக்கங்கள் செய்யும் அரசியல் கொலைகளையும் 'அழித்தொழிப்பு'களையும் நாம் ஒருசேர எதிர்த்து நிற்கும் போதுதான் நமது மரணதண்டனைக்கு எதிரான குரலுக்கு அறம் இருக்கும். ஒரு பகுதி அநீதிகளை எதிர்த்து இன்னொரு பகுதி அநீதிகளைக் கண்டுகொள்ள மறுப்பது அரசியல் குயுக்தியே தவிர அது அறம் சார்ந்த அரசியலாயிருக்க முடியாது.

அரசு வழங்கும் மரணதண்டனைகளிற்கும் போராட்ட அமைப்புகள் வழங்கும் மரணதண்டனைக்கும் வேறுபாடுகள் இல்லையா என்றால் நிச்சயமாக வேறுபாடுகள் உள்ளன என்பதுதான் எனது பதில். முன்னையது சட்டபூர்வமான அநீதி. மற்றையது சட்டத்திறகுப் புறம்பான அநீதி என்பதே அந்த வேறுபாடு. இன்னொருபுறத்தில் விடுதலைப் புலிகள் தங்களுக்கான சொந்தச் சட்டக்கோர்வைகளையும் நீதிமன்றங்களையும் பொலிஸ்படையையும் சிறைச்சாலைகளையும் வைத்திருந்தார்கள், அதன்வழியே அவர்கள் மரணதண்டனைகளை முன்மொழிந்து நிறைவேற்றினார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

என்ன இருந்தாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மரணதண்டனை விதிப்பது வேறுமாதிரியானதல்லவா என்பது அரசியல் அப்பாவித்தனமான கேள்வி மட்டுமே. அரசு சரியான அர்த்தத்தில் ஒருபோதும் ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதியாக இருப்பதில்லை. இந்தியாவில் ஒவ்வெரு அரசுகளும் இந்தியாவில் வாக்களிக்கத் தகுதியுள்ள மக்களின் கால்வாசித் தொகையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக மட்டுமே இருப்பன. நமது தேர்தல் சனநாயக முறையின் ஊழல்களையும் கவனத்திலெடுத்தால் சரியான அர்த்தத்தில் அவை மைனாரிட்டி அரசுகளே. அரசு என்பது நாட்டின் உயர்குடிகளினதும் உயர் பொருளியல் சக்திகளினதும் விசுவாசமான பாதுகாவலன் என்பதும் நீதிமன்றம், காவற்துறை, சிறைச்சாலை போன்றவை அந்த ஆதிக்க சக்திகளின் நலன்களைக் காக்க நிறுவப்பட்டவை என்பதெல்லாம் தோழர்கள் அறிந்த அரசியல் அடிப்படைப் பாடங்களே. ஆகவே அரசியல் வழக்குகளில் மரணதண்டனை மட்டுமல்ல அரசு வழங்கும் எந்தத் தண்டனையுமே ஒருதலைப்பட்சமானதாகவும் ஆளும் வர்க்கத்தினரின் நலன்களைக் கருதியுமே இருக்கமுடியும். 'நீதி என்பது அரசின் வன்முறை' என்பது அனார்க்கியர்களின் புகழ்பெற்ற முழக்கம்.

இங்கேதானுள்ளது அரசு வழங்கும் மரணதண்டனைகளுக்கும் போராட்ட அமைப்புகள் வழங்கும் மரணதண்டனைகளுக்குமான வேறுபாடு. போராட்ட அமைப்புகள் உச்சபட்ச அறத்தையும் விடுதலை அரசியலையும் பேசியவாறே களங்களிற்கு வருகின்றன. ஏராளமான அரசியல் உணர்வாளர்களையும் இளைஞர்களையும் அவை தங்களது புரட்சிகர முழக்கங்களால் வென்றெடுகின்றன. இயக்கங்கள் தமது தேவைகளுக்காகப் பொதுமக்களில் தங்கியிருக்கின்றன. அரசுக்காக பொதுமக்கள் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீரகளா? அவ்வாறு ஏதாவது செய்தாலும அது தேசியக் கொடி விற்பது போலவும், பொப்பி மலர் விற்பது போலவுமான ஒருநாள் கூத்துகளே. வெகுசனங்களுக்கு இயல்பாக அரசின் மீதான எதிர்ப்புணர்வு இருந்துகொண்டேயிருக்கிறது. அது அரசியல் சக்தியாகத் திரளாத போதும் கூட அந்த உணர்வு அவர்களுக்குள் கனன்றுகொண்டேயிருக்கிறது. ஏனெனில் அது அவர்களது வாழ்வாதாரங்களுடனும் அடிப்படை உரிமைகளுடனும் தொடர்புடையது. எனவே மக்கள் அரசுக்கு எதிராகப் புரட்சிகர முழக்கங்களுடன் ஒரு போராட்ட இயக்கம் போதிய வலுவுடன் எழுந்தால் அதை ஆதரிக்கிறார்கள். அந்த இயக்கத்திற்காக அவர்கள் அர்ப்பணிப்புகளைச் செய்யவும் தயங்குவதில்லை.

இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு ஈழப் போராட்டம். ஆனால் அந்த விடுதலை இயக்கமே அதிகார மையமாக மாறி மக்களுக்கு அடக்குமுறைகளையும், வதைகளையும், மரணதண்டனைகளையும் வழங்கிவிடுவது எவ்வளவு கொடுமை. விடுதலை .அரசியல் வழி நிற்கும் நமக்கு அரசு வழங்கும் மரணதண்டனைகளைக் காட்டிலும் விடுதலை இயக்கங்கள் எனச் சொல்பவை வழங்கும் மரணதண்டனைகளும் அழித்தொழிப்புகளுமே அதிர்ச்சியையும் வருத்தத்தையும் அதிகமும் அளிக்கக் கூடியவை.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்த இந்தியாவும் சீனாவும் சர்வதேச அரங்கில் முனைந்து நிற்பது நமக்கொன்றும் ஆச்சரியமானதல்ல. ஏனெனில் அந்த அரசுகள் தமது சொந்த மக்களின் மனிதவுரிமைகளையே தூக்கிப்போட்டு மிதிக்கும் பண்புள்ளவை. ஆனால் இலங்கை அரசின் மனிதவுரிமை மீறல்களைப் புரட்சிகர அரசுகளாக நாம் நம்பிக்கொண்டிருக்கும் கியூபாவும் வெனிசூலாவும் ஆதரித்து நிற்கும்போதுதானே நாம் அங்கலாய்க்கவும் அமரந்தா அவர்கள் பிடல் காஸ்ரோவுக்குக் கடிதமெழுதவும் வேண்டியிருக்கிறது. இதைப் போன்றதுதான் அரசு வழங்கும் மரணதண்டனைகளிற்கும் போராட்ட அமைப்புகள் வழங்கும் மரணதண்டனைகளிற்குமான வேறுபாடு. மரணதண்டனைகளை அவர்கள் வழங்கும் தர்க்கங்கள் வேண்டுமானால் வேறுவேறாயிருக்கலாம். ஆனால் அந்தத் தர்க்கங்களுக்குள் அநீதி என்ற ஒன்றைத் தவிர வேறேதும் உறைந்திருப்பதில்லை. இதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் எனக் கேட்டால் அது குற்றமா!

குறிப்பான ராஜீவ்காந்தி படுகொலைச சம்பவத்திற்கே நேரடியாக வருகிறேன். ராஜீவ்காந்தி என்ற இந்திய அரசியல் தலைவரை, இந்தியாவின் முன்னாள் பிரதமரை புலிகள் படுகொலை செய்தது தார்மீகரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் தந்திரோபாயரீதியாகவும் மிகத் தவறான செயல். முட்டாள்தனமான வேலையது என்பதை முள்ளிவாய்க்கால் நமக்குச் சொல்லித்தான் கொடுத்திருக்கிறது. இதைச் சொல்வதால் இந்திய அமைதிப் படையினர் ஈழத்தில் நடத்திய கொடுமைகளை நான் ஆதரிப்பதாக ஆகிவிடாது. ஒரு தவறுக்குப் பதிலாக இன்னொரு தவறு நிகழ்த்தப்பட்ட வரலாறு ராஜீவ் காந்தி படுகொலை.

ராஜீவ் காந்தி கொலை, அமிர்தலிங்கம் கொலை, பத்மநாபா கொலை லக்ஷ்மன் கதிர்காமர் கொலை மட்டுமில்லாமல் பிரபாகரன் கொலைகூட பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் தன்மைகள் வாய்ந்தவைகளேயொழிய அவற்றால் எந்த அரசியல் நன்மைகளும் மக்களிற்கு விளைந்ததில்லை. அவற்றின் தீமைகளை ஈழ மக்கள் போதுமானளவிற்கு அனுபவித்துவிட்டாரகள். கொலை அரசியல் என்னும் பாஸிச அரசியல் மனநிலையிலிருந்து நமது சமூகம் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால் இன்று ராஜீவ் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கோருபவர்களில் பலர் இந்தக் கொலைக் கலாசாரத்திலிருந்து மீளவில்லை. இவர்கள் கணனியின் முன்னாலமர்ந்து என்ன வேண்டுமென்றாலும் எழுதிவிட்டுப் போவார்கள். விளைவை எதிர்கொண்டு அகதி முகாமில் குண்டு விழுந்தும், பதுங்கு குழிக்குள் பாம்பு கடித்தும் சாவது யார்?


இந்தவார ஆனந்த விகடன் இதழில 'பனங்காட்டுக்குள் பழிதீர்க்கப்பட்டார் ராஜீவ்காந்தி' என எழுதுகிறார் திருமாவேலன். 'ராஜீவ் விடயத்தில் நடத்தப்பட்டது கொலையல்ல, அங்கே மரணதண்டனையே வழங்கப்பட்டது' என்கிறார் சீமான். 'போர்க் குற்றவாளிக்கு எதிரானதொரு நியாயமான நடவடிக்கையே ராஜீவ் கொலை' எனறெழுதுகின்றனர் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர். ஆக இடது, வலது, கண்டது, கடியது எல்லோருக்குள்ளுமே அரசியல் கொலைக்கு ஆதரவானதொரு மனநிலை அமைந்திருக்கிறது. அவ்வாறானால் இதே மனநிலை காங்கிரஸ்காரனுக்கு அமைந்திருப்பதை இவர்கள் எவ்வாறு கண்டிக்க முடியும் என்றொருவர் கேட்டால் பதில் என்ன? அதாவது அமைதிப் படையின் ஈழப் படுகொலைக்குப் பழி ராஜீவ் கொலையெனில் ராஜீவ் கொலைக்குப் பழி முருகனும் சாந்தனும் பேரறிவாளனும். முதலில் தயவு செய்து இந்தக் கொலைச் சமன்பாடுகளை நிறுத்துங்கள் எனச் சொன்னால் அது தவறா?

உடனடியாகவே எனது கருத்து 'புலிகளின் படுகொலைகளைக் கண்டிக்காதவர்களிற்குப் பேரறிவாளனிற்கு வழங்கப்பட்ட மரணதண்டனையை கண்டிக்கத் தகுதியில்லை என்று கருங்காலித்தனமாக ஷோபா சொல்கிறார்' எனத் திரிக்கப்பட்டது. நான் அவ்வாறெல்லாம் சொல்லவில்லை. மரணதண்டனை ஒழிப்பு மீதான கவனம் குவிக்கப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் புலிகளின் மரணதண்டனைகளைக் குறித்தும் நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணமிது என்றுதான் நான சொன்னேன். அவ்வாறு கண்டிக்காதவர்களும், இன்னும் சொல்லப் போனால புலிகளின் படுகொலைகளை 'அழித்தொழிப்புகள்' என்றும் அவை நியாயமான மரணதண்டனைகளே என்றும் வாதிடக் கூடியவர்களும் பங்கெடுத்த சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரைக் காப்பற்றக் கோரும் கையெழுத்து இயக்கத்தில் நானும் என் பெயரை இணைத்துக்கொண்டேன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

அமைதிப் படையின் ஈழப் படுகொலைக்குப் பழி ராஜீவ் கொலை யெனில் ராஜீவ் கொலைக்குப் பழி முருகனும் சாந்தனும் பேரறிவாளனும்.. முதலில் தயவு செய்து இந்தக் கொலைச் சமன்பாடுகளை நிறுத்துங்கள் எனச் சொன்னால் அது தவறா?

# உறவுகளுக்கு விடுதலை வேண்டும்
# குடும்பப் பெண் ஜனாதிபதிக்கு மகஜர்



(கிளிநொச்சி)

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளாக இருக்கும் எமது உறவுகளைச் சர்வதேச கைதிகள் தினத்தை முன்னிட்டு பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுவிக்குமாறு கோரி கிளிநொச்சியைச் சேர்ந்த சூரியமூர்த்தி பரமேஸ்வரி என்பவர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிறையில் அடைபட்டிருக்கும் எமது உறவுகள் நீண்ட காலமாக விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந் நிலையில் சர்வதேச சிறைக கைதிகள் தினத்தை முன்னிட்டு இந்த கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி இவர்களை விரைவில் விடுதலை செய்ய ஆவண செய்யுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிள்ளைகளின் எதிர்காலம் குடும்பங்களின் வாழ்வியல் நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டு இறுதி யுத்தத்தில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வுக்கான சந்தர்ப்பம் வழங்கி அவர்களை விடுதலை செய்கின்றீங்கள் அதனை நாம் வரவேற்கின்றோம். சிறையில் வாடும் எமது உறவுகளுக்கும் இதே போன்று சந்தர்ப்பம் வழங்கி அவர்களைப் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று காலை 10 மணியளவில கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து சூரியமூர்த்தி பரமேஸ்வரி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரைக் கையளித்தார். (உ,கே)

# நைரோபியில் தீ விபத்து நூற்றுக்கும் அதிகமானோர் பலி!

கென்ய தலைநகர் நைரோபியில், நேற்று திங்கட்கிழமை பெற்றோல் விநியோக குழாயொன்று வெடித்ததால் ஏற்பட்ட தீவிபத்தினால் நூற்றுக்கும் அதிகமானோர் பலியானதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைரோபியின் "லுங்கா லுங்கா கைத்தொழில் பிரதேசத்தில்" இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. அப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலிஸாரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தீயை அணைப்பதற்கு தீயணைப்பு படையினர் போராடி வருகின்றனர்.

### ஜெனிவாவில்...

சட்டங்களையும், தடுப்புக்காவலையும் அரசு மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அவர வலியுறுத்தியுள்ளார். இதன் காரணமாக இருவருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே வேளை அங்கு உரையாற்றிய சிறிலங்கா அமைச்சர் மகிந்த சமரசிங்க, இலங்கை மீது நீதியற்ற குற்றச்சாட்டுகளைத் திரும்பத்திரும்பக் கூறுவதை அனைத்துலக சமூகம் கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூட்டமைப்புடன்...

நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தாக அவர் குறிப்பிட்டார். வடக்கில் இராணுவமயபடுத்துவதாக பிளேக் தெரிவித்த கருத்தை ஜனாதிபதி நிராகரித்தார். ஏனைய பகுதிகளைப் போன்று வட பகுதியிலும் இராணுவ முகாமகள் இருக்கின்றது. இது ஏனைய நாடுகளை போன்றே அது தேவையெனவும் நாம் கூறினோம் என அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### இந்த நிலை தொடரா...

உயர்ந்தது. அந்த வேளையில், இன்னும் தங்கம் விலை உயரும் என்ற எண்ணத்தில் பலர் அதில் முதலீடு செய்தனர். ஆனால், அடுத்த சில மாதங்களில் தங்கத்தின் விலை வெகுவாக (69 சதவீதம்) குறைந்து. இவ்வாறான நிலை தற்போதும் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக பொருளாதார வல்லுனர்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்போது நாள்தோறும் தங்கம் விலை உயர்ந்துகொண்டு இருப்பதால், ஏராளமானவர்கள், பங்கு சந்தையில் செய்து இருந்த முதலீடுகளை திரும்பப் பெற்று அதை தங்கத்தில் முதலீடு செய்கிறார்கள். இதனால் பங்கு மார்க்கெட்டும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### நீரில் மூழ்கி...

கடற்படையினர், பொலிஸார் மற்றும் நீச்சல் தெரிந்த வல்வெட்டித்துறை, தொண்டமனாறு இளைஞர்களும் இணைந்து மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது சடலம் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### இலங்கை அரசு...

இந்த நிலையில், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த நீதியான விசாரணையொன்றை இலங்கை அரசு தானே நடத்துமென்ற உத்தரவாதத்தை வழங்க முடியுமா என்று இந்தியாவிடம் இராஜதந்திர ரீதியில் அமெரிக்கா கேட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கான உத்தரவாதத்தை இந்தியா வழங்கினால் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக் குழுவொன்றை உடனடியாக அமைபபது பற்றிய விடயத்தை மீள் பரிசீலனை செய்யமுடியுமென்று அமெரிக்கா இந்தியாவிடம் சுட்டிக்காட்டியிருப்பதாக மூத்த இராஜதந்திரியொருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்று அவசியமென்று மேறகுலக நாடுகள் இந்தக் கூட்டத் தொடரில் வலியுறுத்தலாம் என்று கூறப்படும் நிலையில் அமெரிக்கா இந்தியாவிடம் இவ்வாறான உத்தரவாதத்தைக் கோரியுள்ளது. அமெரிக்காவின் இந்தக் கோரிக்கை குறித்து இந்தியா இதுவரை எதுவித பதிலையும் வழங்கவில்லை. இந்தியத் தரப்பு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது.

அதே சமயம், கொழும்பு வந்து புதுடில்லி செல்லும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் ரொபர்ட் ஓ பிளேக புதுடில்லியில் இது குறித்து பேச்சு நடத்தவுள்ளாரெனக் கூறப்படுகிறது. இந்தியாவின் இந்தப் பதிலே சர்வதேச அரங்கில் இலங்கைத் தொடர்பான தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமென மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

### றொபேட் ஓ பிளேக்...

இவ் விடயங்களையும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளரிடம் தாம் விரிவாக எடுத்துவிளக்கியுள்ளதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தாம் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவரும், நாடாளுமன்ற உறுபபினருமான ஆர்.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், ரொபேட் ஓ பிளேக்குடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெற்றீஸியா மற்றும் அரசியல் செயலாளர் போல் காட்டர் ஆகியோரும கலந்துகொண்டனர். இச்சந்திப்பின் போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் நிலைப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டதாகவும், இதன் மூலம் சிறந்த தீர்வொன்றை எதிர்பார்க்க முடியாது என்றும் இது சுயாதீன மற்றது என்றும் இதன்மூலம் தமிழ் மக்களுக்குப் பொருத்தமான தீர்வொன்றை எதிர்பார்க்க முடியாது என்றும் அவரிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்புக் குறித்து நா.உ, சம்பந்தன் தெரிவிக்கையில் எமது மக்களின் தேவைகள் பற்றிய அனைத்து விடயங்களையும் கதைத்தோம். குறிப்பாக மனித உரிமை விடயங்கள், மனிதாபிமான நடவடிக்கைகள், எதிர்கால தேவைகள், அரசியல் தீர்வு போன்ற பல விடயங்கள் பற்றி விரிவாக உரையாடினோம். எமது கலந்துரையாடல் மிகவும் திருப்திகரமாக அமைந்தது. எமது ஆதங்கங்களையும் வேண்டுகோளையும் நல்ல முறையில் பிளேக் செவிமடுத்தார் என்று சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

# உரிமை கோரப்படாத இயந்திரங்கள் நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தில் உரிமை கோரப்பட்டாத இரண்டு மோட்டார் சைக்கிள் இயந்திரங்கள் பாரப்படுத்தப்பட்டுள்ளன. எனவே உரியவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்து. மேற்படி உபகரணத்தை 6 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அரசு உரிமை ஆக்கப்படுமென யாழ். நீதிவான் நீதின்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# முதலாவது பெண் சட்டமா அதிபர் ஈவவனசுந்தர பதவிப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

பிரதி அரச வழக்கறிஞர் ஈவ வனசுந்தர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சட்டமா அதிபராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் நியமிக்கப்படும் முதலாவது பெண் சட்டமா அதிபர் இவர் எனபது குறிப்பிடத்தக்கது. இவர் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமானம் செய்து கொண்டுள்ளார். 1979 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்த இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் உயர் பட்டம் பெற்றவராவார்.

# கப்பல் பயணிகளுக்கு விசேட சலுகை

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் பயணத்தை மேற்கொள்ளும் ஸ்கோட்டியா பிரின்ஸ பயணிகள் கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர நவம்பர் மாதங்களில் பயணிகளுக்கான விசேட சலுகைகளை அறிவிக்கவுள்ளது. குறிப்பிட்ட மாதங்களில் அதிகளவான பயணிகள் இந்தக் கப்பலில் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கப்பல் நிறுவன பொதுமுகாமையாளர் பி.ஏ.பொன்னப்பா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மீள் குடியேற்றத்துக்காக அழைத்து வருவது, தொடர்பாக அகதிகளுககான ஐக்கிய நாடுகள் சபையுடன் பேச்சு நடத்தப்படுகிறது. அத்துடன் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவதாக பொன்னப்பா கூறினார்.

இந்தக்கப்பலில் பயணிப்போரில 20 வீதமானவர்கள் வர்த்தகர்களாவர். தென்னிந்தியாவில் இந்த கப்பல் சேவைக்காக சுமார் 100 முகவர்கள் செயற்படுகின்றனர். இலங்கையில் 20 முகவர்கள் செயற்படுகின்றனர்.


# யுத்தத்தில் வெற்றி பற்றீசியா புகழாரம்



நீண்ட காலமாக நிலவிய பயங்கரவாதத்துக்கு நம்பமுடியாத வகையில் இலங்கை முகங்கொடுத்தது என்று அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். செப்ரெமபர் 11 தாக்குதல் குறித்த நிகழ்வு தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமெரிக்க தூதுவர் பற்றீசியா பியூட்டினியஸ், பயங்கரவாதத்தைத் தடுத்து, நாடுகள் அனைத்தும் போராடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக பல உயிர்கள் காவுக்கொள்ளப்பட்டன.

### செய்திப்பரணம்

**அமெரிக்க டொலரின் அந்தஸ்தை ஶ்ரீலங்கா தமக்குரிய பணத்துக்கும் தந்ததாம் - கமக்காரன் மூதல் கடல் தொழிலாளர் முற்றொன்பது ஆழ்வீதம் இதமாகும் பணமாற்றம் இனி!**



# மக்களுக்கான மானியங்கள் தொடராது சொந்தக் காலில் நிற்க திட்டமிட வேண்டும்



(கிளிநொச்சி)

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து மக்களுக்கு மானியமாக உதவிகளை வழங்கிக் கொண்டிருக்காது. இவை குறிப்பிட்ட சில காலத்திற்கு மட்டுமே வழங்கப்படும். எனவே கிடைக்கப்பெறும் உதவிகளை திட்டமிட்டு பயன்படுத்தி தற்போதுள்ள வாழ்க்கை நிலையிலிருந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி கண்ணகிபுரத்தில் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எழுபது பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், நூறு பயனாளிகளுக்கு 25000 ரூபா வீதம் வாழ்வாதார நிதியும் மானியமாக ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்பட்டது.

இதேவேளை நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் தாங்கள் எதிர் கொள்கின்ற வீட்டுத்திட்டம், போக்குவரத்து, குடிநீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கிராம அலுவலர் சசிக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் உதவிக் குழுத்தலைவர் பிரசாந்தன், பிரதேச இராணுவ அதிகாரிகளான கேணல் கமகே, மேஜர் பெர்ணாடோ புள்ளே, கரைச்சி பிரதேச காணி அலுவலர் சிவகுமார், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்வி வலயங்களுக்கு யுனிசெப் உதவி

(கொழும்பு)

யுனிசெப் நிறுவனம் கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களின் தேவைகளுக்காக உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களின் தேவை கருதி தலா இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் 24 மடிக் கணினிகளையும் யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிண்ணியா - திருகோணமலை வடக்கு திருக்கோயில் கல்வி வலயங்களின் பாவனைக்காக புதிய பிக்கப் ரக வாகனங்களையும் யுனிசெப் நிறுவனம் விரைவில் வழங்கி வைக்கவுள்ளது.

# ஜனாதிபதியுடன் பிளேக் சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக், நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளார். அதிகாலை கொழும்பை வந்தடைந்த பிளேக், அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷவுடன் காலை உணவு உண்டார். இதன் போது இடம்பெற்ற சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் பங்கேற்றதாக ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

# குற்றச்செயல்களுக்கு குறைவில்லை நிரம்பி வழியும் யாழ். சிறைக்கூடம்

(யாழ்ப்பாணம்)

யாழில் குற்றச்செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதால் யாழ். சிறைச்சாலை நிரம்பிவழிகிறது. இடநெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் சிறை அதிகாரிகள் திணறுகின்றனர்.

அதேவேளை யாழ். சிறைச்சாலைக்கென பண்ணையில் ஒதுக்கப்பட்டிருக்கும் மூன்றரை ஏக்கர் காணியில் புதிய சிறைச்சாலைக் கட்டடம் அமைக்கும் பணிகள் தாமதமடைந்திருப்பதன் காரணமாக யாழ். சிறைச்சாலை தொடர்ந்தும் தனியார் கட்டடத்திலேயே இயங்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இதனால் யாழ். சிறைச்சாலை நிர்வாகம் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருட முற்பகுதியில் யாழ். சிறைச்சாலைக்கு 272 மில்லியன் ரூபா செலவில் யாழ். பண்ணைப் பகுதியில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்திருந்தது.

அத்துடன் அதற்கான கட்டடத்திற்கு கடந்த ஜுலை மாதம் அடிக்கல் நாட்டப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகிருந்தது. இருந்தும் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் சிறைச்சாலையில் கைதி வரும்போது நெருக்கடியை சிறைச்சாலை நிர்வாகம் எதிர்நோக்கியுள்ளதுடன் ஏனைய வசதிகளும் பற்றாக்குறையாகவே உள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## கல்விசாரா ஊழியர் விடுமுறை போராட்டம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள கல்விசார ஊழியர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள பிரச்சினையினை வலியுறுத்தியே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக கல்விசார ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ஆர்.எம்.சந்திரபால தெரிவித்துள்ளார்.

மேலும், பல்கலைக்கழக கல்விசார ஊழியர்கள் முகம் கொடுத்துவரும் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வினை பெற்றுக்கொடுக்க தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


## தமிழினிக்கு விளக்கமறியல் தொடர்கிறது

(கொழும்பு)

புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவு தலைவி சுப்ரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே பிரதம நீதவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# மூன்று வீடுகளில் திருட்டு கலட்டியில் திருடர்கள் கைவரிசை



(யாழ்ப்பாணம்)

யாழ். கலட்டி சீனியர் லேன் பகுதியில் நேற்று முற்பகல் பட்டப் பகலில் மழை பெய்து கொண்டிருக்கையில் 3 வீடுகளில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ரொக்கப்பணம், நகை முதலியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையே நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர்.

தொழிலின் நிமித்தம் வீடுகளைப் பூட்டிவிட்டு வெளியே சென்றிருந்த சமயமே இத்துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி வரும் கண்ணதாசன், பான்சி கவுஸ் உரிமையாளர் சுரேஸ், ஆசிரியர் தொழில் செய்துவரும் இரத்தினவேலு ஆகியோரது வீடுகளிலேயே இத்திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்களது வீட்டின் ஓட்டைப் பிரிந்து நுழைந்த திருடர்கள் சீலிங்கை உடைத்து உள்ளிறங்கியே இத்திருட்டில் ஈடுபட்டுள்ளனர். குறித்த வீடுகளின் அலுமாரி மற்றும் பகுதிகளைச் சல்லடை போட்டுத் தேடிய திருடர்கள் அங்கிருந்த ரொக்கப்பணம் 21 ஆயிரம் மற்றும் தோடு உட்பட சில நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

திருடர்கள் இறுதியாக பான்சி கவுஸ் உரிமையாளர் வீட்டில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் வீட்டின் உரிமையாளரது மனைவி வீட்டிற்குள் நுழைவதை அவதானித்த திருடன் அங்கிருந்து மதில் பாய்ந்து ஓடித் தப்பிய தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கு முன்னதாக குறித்த பகுதியில் 3 நபர்கள் நடமாடியதை அயலில் இருந்த ஒருவர் அவதானித்ததாகவும், இருந்தும் அவர்கள் அயலில் இருப்பவர்கள் என அவர் நினைத்துக் கொண்டதாகவும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விசாரணைகள் தொடர்கின்றன. (பா)

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஊடகத்துறையே அதிகம் பாதிக்கப்பட்டது

## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் கவலை

செப்டம்பர் 11 தாக்குதலின் பின்னர் உருவான பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற சித்தாந்தமும் அதனையொட்டி உருவாக்கப்பட்ட சட்டங்களும் பல நாடுகளில் ஊடகத்துறையின் மீதே கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளத்தின் தலைவர் ஜிம் போமெல்லா தெரிவித்தார். மேலும் ஜனநாயகத்தின் பாதுகாவலாக இருக்க வேண்டிய ஊடகத்துறை, மிக முன்னேறிய நாடுகளில் கூட அதன் பணியைச் செய்யவிடாது முடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனமும் அதன் ஐரோப்பிய குழுவான ஐரோப்பிய ஊடகவியலாளர்கள் சம்மேளனமும் (EFJ) ஏற்பாடு செய்திருந்த, பயங்கரவாத ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு கொள்கைகளால் முடங்கிப் போன ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் மௌனித்திருக்காது பணியை முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தினால் (IFJ) அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

After A/L?
Government Schol.
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Multimedia_USA
FIT University of Colombo-ucsc Rs.10,000 off
(C/572)
CIMA-UK
Per Level Rs.14,400
Batch I : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 9 AM- 2 PM
Engineering-USA 80% off
Batch i : Sat & Sun 10 - 12PM
Batch ii : Sat & Sun 4 - 6PM
Batch iii : Mon- Fri 8 AM -10 AM
BIT University of Colombo-ucsc
Per year Rs.20,000 (Sem 1 & 2)
Batch i : Sat & Sun 8 - 12PM
Batch ii : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Fri 4.30-5.30 PM
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,
MCS
Supported By UNDP/JRRP
www.mcsitcampus.org
Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing
Free Course fee* *Hardware *Accounting *DTP *English
324,Palaly Road, Campus Junction,Jaffna.
கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.